மக்கள் வெளியீடு



பேராசிரியர்

நா. வானமாமலை

# உரைநடை வளர்ச்சி

மக்கள் வெளியீடு

பேராசிரியர்

நா. வானமாமலை

# உரைநடை வளர்ச்சி

மக்கள் வெளியீடு 33
முதற்பதிப்பு டிசம்பர் 1978
இரண்டாம் அச்சு ஆகஸ்டு 1999
உரிமை பதிவு

பொதுப் பதிப்பாசிரியர் டாக்டர் மே. து. ராசு குமார்

விலை ரூபாய் பதினாறு

மக்கள் வெளியீடு
24 உனிசு அலி சாகிப் தெரு
எல்லிசு சாலை சென்னை 600 002
தொலைபேசி 8545532

மக்கள் அச்சகம் சென்னை 600 002

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| பதிப்புரை | 4 |
| இரண்டாம் அச்சுக்கான பதிப்புரை | 5 |
| முன்னுரை | 9 |
| தொடக்கக் காலம் | 11 |
| இடைக் காலம் | 17 |
| புதிய துறைகளில் உரைநடை | 30 |
| பாரதி காலம் | 38 |
| பாரதி பிற்காலம் | 42 |
| தற்காலம் | 54 |

# பதிப்புரை

ஒரு மொழியின் வளர்ச்சி, தோற்றத்தின் தொன்மையிலோ, இலக்கிய—இலக்கணச் சிறப்புக்களிலோ, பேசுவோரது எண்ணிக்கையிலோ மட்டும் மதிப்பிடப்படுவதில்லை.

எந்த மொழியும் புதிய வளர்ச்சிகளைக் கையாளும் வகையில் செழுமையும் வளமும் கொண்டிருந்தால்தான் உயிரோட்டத்துடன் அம்மொழியினைப் பேசுவோருக்கு அது பயன்படுவதாக அமையும்.

ஒவ்வொரு வரலாற்றுக் கட்டத்திலும் ஏற்பட்ட மாற்றங்களும் ஏற்றங்களும் அப்புதிய சூழ்நிலைகளுக்கேற்ப மொழியின் உரைநடை அமைப்பை உருவாக்கியிருக்கின்றன. புதிய சொல்லாக்கம், சொற்றொடரமைப்பு, செறிவு, நெகிழ்வு என்ற யாவும் அவ்வக்காலத் தேவைகளையொட்டித் தோன்றி, அவ்வக் காலக் கருத்துக்களைத் தெளிவாகக் காட்டும் வலுவான கருவியாக மொழியினை வளப்படுத்துகின்றன.

குழுச்சமுதாயம் தனது தேவைகளுக்கேற்ப மொழியையும் உரைநடையையும் உருவாக்கிக் கொண்டது. நிலவுடைமை அமைப்பு தனது வாழ்நிலைக்குத் தேவையானவற்றை ஏற்றுக் கொண்டது. அத்துடன் நிலவுடைமை முறைக்கு அடித்தளமான தத்துவக் கருத்தோட்டங்களை வெளியிடுவதற்கு மொழியையும் உரைநடையையும் அது ஏற்ப அமைத்துக்கொண்டது.

தொழிற்புரட்சிக்குப் பின்னர் தோன்றிய புதுமைகளையும் மின்னியல் காலத்தின் நுணுக்கங்களையும் எடுத்துக்காட்டக் குழுச் சமுதாயத்திலோ, நிலவுடைமை அமைப்பிலோ வாழ்ந்த மக்கள், சொற்களை—சொற்றொடர்களை உருவாக்கிக் கொடுத்திருக்க முடியாது. காலத்தின் தேவைகளைக் கொண்டு, இருக்கின்ற வேர்ச் சொற்களின் துணையுடன் புதிய சொல்லாக்கங்களையும், கண்டுபிடிப்புகளின் அடிப்படைகளையொட்டிய கலைச்சொற்களையும் காண்பது அக்குறிப்பிட்ட காலத்தில் வாழும் மக்களது பணியாகும்.

மொழி வரலாற்றையும் உரைநடை வளர்ச்சியையும் ஆராய்கின்றவர்கள் இந்த அடிப்படையைப் புறக்கணித்துவிடக் கூடாது.

வரலாற்று வழியான பயன்பாடு கருதி ஆராயும் அடிப்படையில் பேராசிரியர் நா. வானமாமலை அவர்கள் இந்நூலினைப் படைத்துள்ளார்கள். பேராசிரியர் அவர்களின் இந்தப் பார்வையும் நோக்கும்தான் வழக்கம் போலப் பிறரது

நூல்களிலிருந்து இந்த நூலையும் தனியாகப் பிரித்துக் காட்டுகின்றன.

இது உரைநடை வளர்ச்சி பற்றிய விளக்கமான—விரிவான நூல் அல்ல என்றாலும், விரிவான—விளக்கமான நூலுக்கான குறிப்புகளாக அமைந்திருப்பதால், தமிழ் உரைநடை வளர்ச்சியினை ஆராய்வோருக்கும் கற்போருக்கும் வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் அடிப்படைகளை அறிந்துகொள்ளப் பெரும் துணையாக அமையும் என்று நம்புகின்றோம்.

கலை, இலக்கியம், வாழ்வியல் போன்ற வாழ்க்கையறிவியல்களை மார்க்சீய நோக்கில் ஆராயும் பேராசிரியர் நா. வானமாமலை அவர்கள் பல்வேறு துறைகளைப் பற்றிய நூல்களை எழுதியுள்ளார்கள். அறிவியல் கண்ணோட்டத்துடன் கூடிய இந்த ஆய்வுகள் அடிப்படைகளை அறிந்துகொள்ளவும் ஆய்வு முறைகளைத் தெரிந்துகொள்ளவும் மிகவும் பயன்படுவனவாக அமைந்திருக்கின்றன.

இவற்றை வெளியிடத் தொடர்ந்து வாய்ப்பளித்து வரும் பேராசிரியர் அவர்களுக்கு இந்த ஆண்டுடன் அறுபது ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. அறுபது நிறையும் மார்க்சீய ஆய்வுப் பேரறிஞர் பேராசிரியர் நா. வா. அவர்களைச் சிறப்பிக்கும் வகையில் அவரது பத்து நூல்களை அச்சிட மக்கள் வெளியீடு ஏற்பாடு செய்துள்ளது.

ஆய்வுப் பேரறிஞர் நா. வா. அவர்களின் பணி சிறக்க—மேலும் அவர்களிடமிருந்து பல்வேறு துறைகளில் வழிகாட்டுதல் பெறத் தமிழ் மக்களின் சார்பில் மக்கள் வெளியீடு விழைகின்றது.

மே. து. ராசு குமார்

# இரண்டாம் அச்சுக்கான பதிப்புரை

பேராசிரியர் நாவா அவர்களுடைய மற்றொரு நூல் தற்போது மறு அச்சாகிறது. அவர்களுடைய முழுமையான தொகுப்பு நூல்களை வெளியிடுவதில் ஏற்படும் சுணக்கத்தில், ஒரு தலைமுறையின் பார்வையிலிருந்து இத்தகைய படைப்புகளை மறைத்து வைத்துவிடக் கூடாது என்பதாலேயே, முன்னர் வெளிவந்தவாறு இந்நூல்களை வெளியிட முடிவு செய்தோம்.

உரைநடை வளர்ச்சி என்பது ஒரு மொழியின் தனிக்கூறு அல்ல. அந்த மொழியைப் பேசும் மக்களினத்தின் சமூக-

பொருளாதார-அரசியல்-பண்பாட்டுப் போக்குகளின் வெளிப்பாடு அது. இந்த வெளிப்பாடு உருவாக்கும் தேவைகளின் பயன்பாடு அது. தேவையும் தேவைக்கேற்ற பயன்பாடும் இல்லையெனில் ஒரு மொழி வளர்ச்சி பெறுதற்கான வாய்ப்புகளை இழந்துவிடும்.

ஒவ்வொரு சமூக-பொருளாதாரக் கட்டமைப்பிலும், அதன் தேவைகளுக்கேற்பத் தமிழ் மொழி இயல்பான— இயற்கையான வளமும் வளர்ச்சியும் பெற்றிருந்தது உண்மைதான். இருந்தாலும், இடைக்காலத் தமிழ் நாட்டில் ஏற்பட்ட அறிவியல், தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளின் தாக்கம் தமிழ் உரைநடையில் காணப்படவில்லை. இலக்கியம், இலக்கணம், உரை, தத்துவம், சமயம், ஆட்சியியல் போன்ற துறைகளில் தமிழ் உரைநடை பயன்படுத்தப்பட்டவாறு இந்த அறிவியல், தொழில்நுட்பத் துறைகளில் உரைநடை எழுத்துருவம் கொள்ளவில்லை.

கட்டடம், நீர்ப்பாசனம், சிலைகள் வார்ப்பு, மருத்துவம், போர்க் கருவிகள் போன்ற பல துறைகளில் தமிழ் நாட்டில் ஏற்பட்டிருந்த முனைப்பும் முன்னேற்றமும் தமிழ் உரைநடையாக உருவாக்கம் பெறவில்லை. இத்தகைய அறிவு சார்ந்த துறைகளின் ஆற்றல், பட்டறிவுப் பகிர்ந்து கொள்ளுதலாகக் கற்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டதேயன்றி, எழுத்தில் பதிவு செய்யப்பட்டுக் கற்பிக்கப்படவில்லை. இதற்காகப் பயன்பாட்டில் இருந்த வாய்மொழி நடை, எழுத்து நடையாக ஏடேறவில்லை.

தன் காலத்துக்குத் தேவையான உரைநடையை உருவாக்கிக் கொள்கின்ற தன்மை கொண்டதாக இருந்திருக்கவேண்டிய தமிழ், இடைக்காலத்திலேயே இதைச் செய்யத் தவறிவிட்டது. அறிவியல்—தொழில்நுட்ப மொழியாகத் தமிழ் பெற்றிருக்கவேண்டிய வளர்ச்சியின் முளைகள் இடைக்காலத்திலேயே முடக்கப்பட்டுவிட்டன.

ஒரு மொழியைத் தொடர்ந்து இடைவிடாமல் பயன்படுத்தும்போதுதான் அது புதிய சொற்களை உருவாக்கிக் கொண்டு நெகிழ்ச்சியும் இயைபும் பெற்றுச் செழுமையடைகிறது.

தொடக்க நிலையில், புதிய துறைகளில் மொழி அமைப்பு பண்பட்டதாகவும், சொல்ல வேண்டியவற்றை எளிமையாக தெளிவாக வெளிப்படுத்துவதாகவும் முழுமை பெறவில்லை என்பது உண்மைதான். புதிய பொருள்களுக்கு ஏற்ற பொருத்தமான தமிழ்ச் சொற்கள் உடனடியாக உருப்பெற்றுவிடவில்லை. பத்தொன்பதாவது நூற்றாண்டிலும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வெளியான நாவல்

போன்ற இலக்கியங்களிலும் இதழ்கள்—ஏடுகள் போன்றவற்றிலும் இந்நிலை கண்கூடாகத் தெரிகின்றது.

தமிழ் இலக்கிய—இலக்கண வளம் கொண்ட மொழியாக இருந்தாலும், அடிப்படை வேர்ச் சொற்கள் பல்கிக் கிடந்தாலும், பயன்பாடுதான் புதிய சொற்களை, ஏற்றவகையில் உருவாக்கித் தர முடியும். இந்த வகையில், அடுத்தடுத்து, தொடர்ந்த பயன்பாடுகளால் இலக்கிய நடையும் இதழியல் நடையும் செப்பமுற்று, செழுமை பெற்று வளர்ந்தன.

'தினமணி' ஆசிரியராக இந்த டி. எஸ். சொக்கலிங்கம் 1940 அளவில் எழுதியிருப்பது இங்கு நோக்கத்தக்கது:

> 'இன்டர்நாஷனல் சிட்வேஷனைப் பற்றி ஜவாஹர்லால் அனலைஸ் பண்ணினது ஒண்டர்புலாய் இருந்தது' என்று சொல்ல வேண்டிய அவசியமே தற்சமயம் இல்லை. அப்படிப் பேசினால் ஆங்கிலம் தெரியாத தமிழருக்குப் புரியவே புரியாது. எல்லாத் தமிழருக்கும் புரியக்கூடிய விதத்தில் 'சர்வதேச நிலைமையைப் பற்றி ஜவாஹர்லால் ஆராய்ச்சி செய்து பேசியது அற்புதமாய் இருந்தது' என்று சுலபமாய்ச் சொல்லலாம். இவ்வளவுக்கும் காரணம் தமிழ் பத்திரிகைகள் தான்.

இன்று 'சர்வதேச நிலை' என்பதற்கு 'உலக நிலை' என்றும் 'அற்புதம்' என்பதற்கு 'வியப்பு' என்றும் எழுதுகின்ற வளர்ச்சி வாய்த்திருக்கின்றது. 'சுதேசமித்திரன்' இதழில் துணையாசிரியராக இருந்த குருமலை சுந்தரம் பிள்ளை 1907ஆம் ஆண்டு வெளியான தமது 'ஜி. சுப்பிரமணிய ஐயர் சரித்திரம்' என்ற நூலில் குறிப்பிடுவது பொருத்தமாக அமைகிறது:

> சுதேசமித்திரன் பத்திராதிபர் எழுதும் தமிழ் நடை அவ்வளவு செவ்வையாக இல்லை என்று சிலர் குறை கூறுகின்றனர். சுதேசமித்திரன் தமிழ்நடை அழகாய் இல்லை என்பது சிறிது உண்மையேயாயினும் அக்குறையைப் பத்திராதிபர் மீது ஏற்றுவதினும் நமது பாஷையின் மீது ஏற்றுவதே பெரிதும் நியாயமாகும். ஏனெனில், நமது தமிழ்ப் பாஷையானது முக்கியமாய் மத சம்பந்தமான விஷயங்களுக்கும் பாடல்களுக்கும்தான் இயைந்ததாயிருக்கிறதேயன்றி ராஜாங்க சம்பந்தமான விஷயங்களைத் தெளிவாய் வெளியிடற்கேற்ற சொல் வளமும், விசாலமும், இளக்கமும் அதனிடம் இல்லை...
>
> ...இக்குறை மித்திரன் ஆரம்ப காலத்தில் இருந்திருப்பினும் இப்பொழுது நமது ஐயர் தமிழ் வசன நடையில் தக்க தேர்ச்சியடைந்துவிட்டாரென்றே எண்ணுகின்றேன்.

இந்த வகையில்தான் அறிவியல்—தொழில் நுட்பம், ஆட்சியியல் போன்ற பிற துறைகளின் மொழியமைப்புகளும்.

தொடக்கத்தில் பயன்படுத்தும்போது, தகுந்த சொற்கள் கிடைக்காமை, சொற்றொடரமைப்புச் சிக்கல்கள், எளிமையின்மை, நெகிழ்ச்சியின்மை, கலைச் சொற்களை உருவாக்குதலில் தடை, கலைச் சொற்களைப் பயன்படுத்துவதில் நிலைத்த தன்மையின்மை என்பன போன்ற தொல்லைகளும் தடைகளும் தோன்றும் என்றாலும், தொடர்ந்த முயற்சிகள்—முனைப்புகள் முழுமையான பயனைத் தரும்.

அரசு அலுவலகங்களில்கூட கோப்புகளில் எழுதப்படும் குறிப்புகளை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மாற்றியபொழுது சிக்கல்கள் எழுந்தன. இன்று அவை களையப்பட்டு வருகின்றன.

ஆங்கில மரபுக்கேற்ப, அம்மொழி பேசுகின்ற நாட்டின் சமூக-பொருளாதார-பண்பாட்டு நிலைகளுக்கொப்ப, சில வகையான சொற்றொடரமைப்புகள் உருவாகியுள்ளன. தமிழ் மரபுக்கேற்ப, தமிழ்நாட்டின் சமூக-பொருளாதார-பண்பாட்டுப் பழக்கங்களுக்கு உரியவாறு நாம் நமது உரைநடை அமைப்பைப் பயன்படுத்தவேண்டும்.

பிறருக்கான அரசு மடல்களில், முகவரியினை முதலில் எழுதிய பின்னர் "He is advised to pay his fees immediately" என்று குறிப்பிடுவார்கள். இந்த ஆங்கில மரபைப் பின்பற்றி "அவர் உடனடியாகத் தனது கட்டணத்தைச் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்" என்று தமிழில் எழுதுவதைப் பார்க்கிறோம். மாறாக, "தாங்கள் தங்கள் கட்டணத்தை உடனடியாகச் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்" என்று எளிதாகக் கூறிவிடலாம்.

காலமும் தேவையும் வேண்டிய சொற்களையும் சொல்லுகின்ற முறைகளையும் தாமாக உருவாக்கிக் கொடுத்துவிடும்.

சர்வகலாசாலை. உப அத்யட்சகர், ஜில்லா, அபேட்சகர், அக்ராஸனர் எல்லாம் மாறி, இன்று பல்கலைக்கழகம், துணைவேந்தர், மாவட்டம், வேட்பாளர், தலைவர் என்று பயின்று வருவதைப் பார்க்கிறோம். இந்தத் தலைமுறையினருக்குப் பழைய சொற்களைச் சொன்னாலும் புரியாது என்ற நிலையே ஏற்பட்டுவிட்டது.

தண்ணீரில் குதித்தால்தான் நீந்தக் கற்றுக்கொள்ள முடியும். சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம், எழுத எழுத, பயன்படுத்தப் பயன்படுத்தத் தமிழ் உரைநடை வளர்ச்சி பெற்று, தமிழரின் மேம்பாட்டுக்கான ஏணியாகும்.

01-08-1999 மே.து. ராசு குமார்

# முன்னுரை

தமிழில் உரைநடை வளர்ச்சி என்ற பொருள்பற்றிப் பல நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. ஆயினும் ஒரு புதிய கோணத்தில் இப்பொருளை ஆராயும் நோக்கத்தோடு மதுரை வாசகர் பேரவையினர் பத்து ஆண்டுகளுக்கு முன் ஒரு சொற்பொழிவு நிகழ்த்த வேண்டிக்கொண்டார்கள். அதில் பாரதி காலம் முடிய உரைநடையின் வளர்ச்சியை வரலாற்று வழியாகச் சுட்டிக் காட்டியிருந்தேன்.

அதற்காகத் தயாரிக்கப்பட்ட குறிப்புகள் கட்டுரையாக எழுதப்பட்டன. மிகப் பண்டைக் கால முதல் சமீப காலம் வரையுள்ள உரைநடையை அதன் பயன்பாடு கருதி ஆராய்ந்தேன். உள்ளடக்கத்துக்கேற்ற உருவமாக உரைநடை விளங்குவதை எடுத்துக்காட்டினேன். பண்டைய கல்வெட்டுக்கள், இலக்கிய உரைகள் ஆகியவற்றை இரு போக்குகளாகக் குறிப்பிட்டேன். இலக்கிய உரைகளின் இரு போக்குகளை விளக்கி, அவை இலக்கிய நடையாகப் புலமையுடையவர்களுக்கு மட்டும் விளங்கும் நடையாக உள்ளது என்பதை மேற்கோள்களோடு காட்டியுள்ளேன். கல்வெட்டு நடை, அவ்வக் காலத்துக்குரிய பேச்சு நடைக்கு மிக நெருங்கிய நடையாக உள்ளது. பொதுவாக வரலாற்று வழியாக உரைநடையின் வளர்ச்சி இந்நூலில் காட்டப்பட்டுள்ளது.

தற்கால உரைநடை பற்றி மூலக் கட்டுரைகள் எதுவும் நான் எழுதவில்லை. பாரதி காலத்தில் தமிழ் உரைநடை பல வாழ்க்கைத் துறைகளிலும் பயன்படுத்தப்பட்டு வலிமையடைந்தது. பல துறைகளிலும் வன்மையாகச் செயல்படக்கூடிய நடையாக வளர்ச்சி பெற்றது. பாரதி தமிழ் நடையை, மக்களுக்குப் பயன்படும் மக்கள் நடையாக மாற்றினார்.

எனது ஆன்ம புத்திரன் டாக்டர் மே. து. ராசு குமாரின் இடைவிடாத தூண்டுதலால், இந்நூலின் பிற்பகுதியான பாரதி காலத்திலிருந்து தற்காலம் வரையுள்ள உரைநடை வளர்ச்சியை எழுதி முடித்தேன்.

பாரதி காலத்துக்குப் பின் பல்வேறு வகையாகத் தமிழ் நடை விரிவடைந்துள்ளது. அவை பற்றிச் சுருக்கமாகவே குறிப்பிட்டுள்ளேன்.

தமிழ் உரைநடை பற்றி எனது நண்பர் சி. சு. செல்லப்பாவின் கருத்துக்களை நான் மேற்கோள் காட்டியுள்ளேன். அவை என் கருத்துக்களோடு உடன்படுகின்றன. ஆயினும் என் கருத்துப் போக்கின் தனித்துவத்தை நான் மறுக்கவில்லை.

இது அடிப்படைகளை ஆராயும் அறிமுக நூல்தான். இதனை ஒரு விளக்க நூலாகக் கருதுதல் கூடாது.

தற்காலத் தமிழ்நடை குறித்தும் இது வலிவும் வனப்பும் பெற்று வளர வேண்டிய துறைகள் பற்றியும் நாம் விரிவாக ஆராயவேண்டும்.

நா. வானமாமலை

# தொடக்கக் காலம்

உணர்ச்சி வெளியீட்டிற்கு ஏற்ற மொழியுருவம் கவிதை. சிந்தனை வெளியீட்டிற்கும் நாவல் கதைகளில் மனப்படிமங் களை வெளியிடுவதற்கும் ஏற்ற கருவி உரைநடை. இவற்றுள் முதலில் தோன்றியது கவிதை. பின்னர் தோன்றியது உரை நடை.

பின்னர் தோன்றியதாயினும், சில சமுதாயங்கள் தங்கள் வளர்ச்சிப்போக்கில் கவிதையைவிட உரைநடையைப் போற்றி வளர்த்துள்ளன. அறிவியல் சிந்தனைகளையும் தத்துவச் சிந்தனைகளையும் வரலாற்றுண்மைகளையும் வெளியிடும் உரைநடை நூல்களை அச்சமுதாயங்களில் வாழ்ந்த அறிஞர் கள் படைத்துள்ளார்கள். பண்டைக் கால கிரீசும் சீனாவும் இத்துறையில் முன்னேறியிருந்தன. வரலாற்றுத் தத்துவ நூல்கள் பண்டைக் கால முதல் கிரீசிலும் சீனத்திலும் தோன்றி யுள்ளன.

> தமிழிலே உள்ள பண்டைக்கால நூல்கள் எல்லாம் செய்யுள் வடிவிலேயே எழுதப்பட்டவைதாம். அவை நீதியையும் தர்மத்தையும் போதிக்கும் நூல்கள்தாம். பண்டை மக்கள் வரலாற்றையும் வாழ்க்கை முறையையும் எடுத்துக்காட்டும் நூல்களும் இருக்கின்றன. பொழுது போக்குக்காகப் படித்துச் சுவைக்கக்கூடிய கதைகளும், கற்பனைகளும் நிரம்பிய நூல்களும் உண்டு. பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் இப்படித்தான் அமைந்திருக்கின்றன.

இவ்வாறு சாமி சிதம்பரனார் 'வசன இலக்கியம் வளர்ந்த விதம்' என்ற தமது கட்டுரையில் கூறுகிறார்.

பண்டைக் கால உரைநடை நூல்கள் நமக்குக் கிடைக்க வில்லையாயினும், பண்டைக் காலத்திலேயே உரைநடை தோன்றிவிட்டது என்பதைக் காட்டும் சான்றுகள் கல்வெட்டு ஆராய்ச்சிகள் மூலம் தெரிய வந்துள்ளன. தமிழ் உரைநடை யின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் பற்றி அறிய அவற்றைப் பற்றி அறிந்து கொள்வது அவசியம்.

தன்னிறைவு கொண்ட சிறு குழுச்சமுதாயங்களில் மொழி தோன்றியது. ஆனால், எழுதிப் பாதுகாக்க வேண்டிய கருத்துக்கள் அவர்களுக்கு இல்லை. எனவே வரிவடிவம் தோன்றவில்லை. பண்டமாற்றுக் காலங்களில்கூட வரிவடிவம் தோன்ற அவசியம் ஏற்படவில்லை. பொன்னும் காசும் பண்டமாற்று அளவீடாகத் தோன்றிய காலத்தில் வரிவடிவம் தேவையாயிற்று. கணக்கு வைத்துக்கொள்ளவும், கடிதங்கள், கைச்சாத்துக்கள் எழுதவும் வரிவடிவம் எழுந்தது.

## நாணயங்கள்—பிராமிக் கல்வெட்டுக்கள்

தமிழ்நாட்டில் போடிநாயக்கனூரில் மௌரியர் நாணயங்கள் அகப்பட்டுள்ளன. சாணக்கியன் தென்னாட்டு வாணிகத்தைப் பற்றியும், முக்கியமாக முத்து, அகில், ஆடைகள் இவற்றை மகத வணிகர்கள் தென்னாட்டிலிருந்து பாடலிபுரத்திற்குக் கொணர்ந்தது பற்றியும் குறிப்பிடுகிறான். இவ்விரண்டையும் சேர்த்துப் பார்த்தால், தமிழ்நாடு, மகதப் பேரரசோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது புலனாகிறது. போடிநாயக்கனூர் நாணயங்களின் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு. இவ்வாணிகத் தொடர்பு ஏற்பட்ட காலத்திலேயே, வாணிகத் தொழில் முறைக்கு உரைநடை பயன்படுத்தப் பட்டிருக்கவேண்டும். ஆனால் அழியக்கூடிய பொருள்களில் எழுதப்பட்டிருந்ததால் அவை அழிந்துபோயிருத்தல் வேண்டும்.

ஏறக்குறைய கி.மு. இரண்டாம் நூற்றாண்டளவில் செதுக்கப்பட்டவை எனக் கணிக்கப்படும் பிராமிக் கல்வெட்டுக்கள் தற்பொழுது தமிழ்நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து கிடைத்துள்ளன. அவற்றுள் எழுபத்தாறு கல்வெட்டுகளை ஆராய்ந்து ஐ. மகாதேவன் ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளார் (உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்குக் கட்டுரை—Tamil Brahmi Inscriptions). அவை யாவும் தமிழ் மொழியில் உள்ளனவென்றும், அவற்றின் வரிவடிவம் அக்காலத்தில் இந்திய நாடு முழுவதிலும் வழங்கி வந்த பிராமி வரிவடிவமென்றும் அவர் கூறுகிறார். தமிழ் வரிவடிவம் தமிழ் ஒலிக் குறிப்புகளுக்கேற்ப, வடநாட்டு வரிவடிவத்தினின்றும் மாற்றப் பட்டிருக்கிறது. இக்கல்வெட்டு வாசகங்களில் பெரும்பாலானவை சமணத் துறவிகளுக்குக் கல் படுக்கையும் அறையும் வெட்டுவித்ததையும் அவர்களுக்கு நடுப்பகல் உணவிற்கு ஏற்பாடு செய்ததையும் தெரிவிக்கின்றன. அவை வெட்டுவித்தவர் பெயரையும் அவர்கள் செய்த அறச்செயலையும் கூறுகின்றன.

இ படுகை செய்விதான் பிட்டன் கொற்றன்

கணைகால் இரும்பொறை மகன் பொறையன் இ அறை அறுத்தான்

இவற்றுள் காலத்தால் முந்தியவை ஒரு வரி வாசகமாகவும், பிந்தியவை இரண்டு மூன்று வரி வாசகங்களாகவும் காணப்படு கின்றன.

தொடக்கக் கால உரைநடையைப் பற்றி அறிந்துகொள்ள இக்கல்வெட்டுக்களே சான்றுகளாக அமைகின்றன. இவை கி.மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரை உரைநடை பயன்படுத்தப்பட்ட துறை களைக் காட்டும். சமயப் பிரச்சாரத்திலும் மொழி ஆராய்ச்சி யிலும் ஈடுபட்டிருந்த சமண சங்கத்தாருக்குத் தங்குமிடமும் உணவு வசதிகளும் செய்துகொடுத்தவர்கள் தங்கள் புகழை நிலைநிறுத்திக்கொள்ள உரைநடை வாசகங்களைக் கல்லின் மேல் வெட்டுவித்தனர். அக்காலத்தில் உரைநடை வழங்கிய துறைகளைப் பற்றி இதற்கு மேல் தெரிந்துகொள்ளுவதற்குச் சான்றுகள் எவையும் கிடைக்கவில்லை.

கி.மு. 2ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. மூன்றாம் நூற் றாண்டு முடியும் வரையுள்ள காலத்தில் செதுக்கப்பட்ட கல் வெட்டுக்களின் வரிவடிவ அமைப்பு மாறி வந்திருந்தபோதிலும், அதன் பொருளடக்கம் பெரும்பாலும் மேற்கூறியபடியே உள்ளது. இறுதிக் காலத்தில் சில மன்னர்கள் தேவகுலங்களை இயற்றிய செய்திகளையும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அரிக்கமேட்டில் அகப்பட்ட மண்பாண்டப் பகுதிகளில் வரையப்பட்டுள்ள பிராமி வாசகங்கள், அப்பண்டங்களை வாங்கி விற்ற வணிகச் சாத்தினரது பெயர்களாக இருக்கலா மென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

பிராமிக் கல்வெட்டு ஆராய்ச்சிகளின் மூலம் தமிழ் உரை நடையின் ஆரம்ப காலம் கி.மு. இரண்டாவது நூற்றாண்டு எனத் தெரிகிறது. ஆயினும் உரைநடை நூல்களோ, உரை நடை வரலாறுகளோ எவையும் இருந்ததாக அவற்றின் மூலம் அறிந்துகொள்ள முடியவில்லை.

## சங்க இலக்கியங்களின் அடிக்குறிப்புகள்

கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலும் அதற்குப் பின் ஐந்தாம் நூற்றாண்டு வரையிலும் உரைநடையைப் பற்றி அறிந்து கொள்ளக் கல்வெட்டுக்களைத் தவிர இலக்கியச் சான்றுகளும்

உள்ளன. தொகை நூல்கள் தொகுக்கப்பட்ட காலம் சுமார் மூன்றாம் நூற்றாண்டாகலாம் என்று வையாபுரிப் பிள்ளை யவர்கள் கூறுகிறார். அக்காலத்திலேயே செய்யுளின் விளக்கக் குறிப்புகள் செய்யுளின் அடியில் இணைக்கப்பட்டன என்றும் அவர்கள் கருதுகிறார்கள். பிற்கால நூல்களின் அடிக்குறிப்பு கள்கூட அக்காலத்திலோ அன்றி அதற்குச் சிறிது காலத்திற்குப் பின்னரோ எழுதப்பட்டிருக்கவேண்டும். அவ்வாறாயின் கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்கும் கி.பி. ஆறாம் நூற்றாண் டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வழங்கிய உரைநடையை ஆராய்வதற்கு அவ்வடிக்குறிப்புகள் துணை செய்கின்றன. தவிர, பல்லவர்களின் முற்காலச் சாசனங்களின் தமிழ்ப் பகுதி களையும் இக்கால உரைநடைக்கு எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம்.

சங்க கால இலக்கியச் செய்யுள் அடிக்குறிப்புக்களினின்றும் அக்கால உரைநடைக்குச் சில எடுத்துக்காட்டுகளைக் காண் போம். இம்மூன்று நூற்றாண்டுகளில் தமிழ் நடையில் அதிக மாற்றமில்லை என்பதை அவை காட்டும்.

**நற்றிணை**

இரண்டாம் கூட்டத்துத் தலைவியை எதிர்ப்பட்டுத் தலைவன் சொல்லியது உணர்ப்பு வயின் வாரா ஊடற் கண் தலைவன் சொற்றதூஉம் ஆம். (155)

பொருள்வயிற் பிரிந்த தலைவன் பருவம் உணர்ந்த நெஞ்சிற்கு உரைத்தது. (157)

வரையாது நெடுங்காலம் வந்தொழுக ஆற்றாளாய தலைமகள் சொல்லியது; தோழி தலைமகளுக்குச் சொல்லு வாளாய் தலைமகன் கேட்பச் சொல்லியதூஉம் ஆம். (272)

வாயில் வேண்டிச் சென்ற தோழிக்குத் தலைமகள் மறுத்து மொழிந்தது; தலைமகனை ஏற்றுக்கொண்டு வழி பட்டாளைப் புகழ்ந்து புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியதூஉம் ஆம். (280)

பரத்தையின் மறுத்தந்த தலைமகற்கு வாயில் நேர்ந்த தோழி தலைமகளை முகம்புகுவல் என முற்பட்டாள், தலைமகள் மாட்டு நின்ற பொறாமை நீங்காமை அறிந்து, பிறிது ஒன்றன் மேல் வைத்து 'பாவியேன் இன்று பேதைமை செய்தேன் எம்பெருமாட்டி குறிப்புணர்ந்து வழிப்படு வேனாவேன் மன்னோ' எனச் சொல்லியது. (386)

**பரிபாடல்**

கார்ப் பருவத்து வையை நீர் விழவணியில் பல்வேறு வகைப்பட்ட இன்பம் கூறி 'இவ்வகைப்பட்ட இன்பத்தை யுடைய நின்னையும் நினைத்திலர்' என வையையை நோக்கித் தலைமகன் கேட்பத் தோழி இயற்பழித்தது. (12)

காதல் பரத்தையுடன் புனல் ஆடிய தலைமகன் தோழியை வாயில் வேண்ட, அவள் புனல் ஆடியவாறு கூறி வாயில் மறுத்தது. (16)

**பதிற்றுப்பத்து**

'நீர் வேண்டியது கொண்மின்' என 'யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல் வேண்டும்' எனப் பார்ப்பாரிற் பெரியோரைக் கேட்டு ஒன்பது பெருவேள்வி வேட்பிக்க பத்தாம் பெருவேள்வியில் பார்ப்பானையும் பார்ப்பனியையும் காணாராயினார். (மூன்றாம் பத்து)

'கலன் அணிக' என்று அவர்க்கு ஒன்பது காப் பொன்னும், நூறாயிரம் காணமும் கொடுத்துத் தன் பக்கத்துக் கொண்டான் அக் கோ. (ஆறாம் பத்து)

தானும் கோயிலாளும் புறம்போந்து நின்று 'கோயில் உள்ள எல்லாம் கொண்மின்' என்று காணம் ஒன்பது நூறாயிரத்தோடு அரசு கட்டிற்கொடுப்ப அவர் 'யான் இரப்ப இதனை ஆள்க' என்று அமைச்சுப் பூண்டார். (எட்டாம் பத்து)

மேற்காட்டப்பட்டவை இலக்கியத்தில் கையாளப்பட்ட உரைநடைக்கு எடுத்துக்காட்டுகள் ஆவன. இவை செய்யுள் நடை போலவே செறிவுடையதாகவும் அருஞ்சொற்கள் நிறைந்ததாகவும் இருக்கின்றன. செய்யுளின் பொருள் அறிந்து கொள்ளும் திறமையுடையவர்களுக்காகவே இவை எழுதப் பட்டன. ஆதலால் இந்நடை பேச்சு வழக்கைப் போல நெகிழ்ச்சியும் எளிமையுமின்றி, புலமையுடையோர்க்கே விளங்குவதாக உள்ளது.

## பல்லவர் கால உரைநடை

இதே காலத்தில் கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் காணப்படும் உரைநடை வேறுவிதமானது. செப்பேடுகளின் முதல் பகுதி கிரந்த வரிவடிவத்தில், சம்ஸ்கிருத மொழியில் செதுக்கப்பட்டிருக்கிறது. இப்பகுதி பல்லவர் பரம்பரையின்

பிரசஸ்தி கூறும். பிற்பகுதி 'வியவஸ்தை' அல்லது செய்தி களைக் கூறும். பிற்பகுதி தமிழில் இருக்கிறது. இவ்வுரை நடை, நெகிழ்ச்சியானதாகவும் எளிதானதாகவும் காணப்படு கிறது. இதனைப் பேச்சு வழக்கு மொழி என்று கூறலாம்.

இதன் உள்ளடக்கம் இலக்கியப் பொருள் அல்ல. உலக வியவஸ்தை, நில உரிமை மாற்றம், அரசியல் ஆணைகள், அவை நிறைவேற்றப்படும் முறை, கோயில் நிருவாகம் முதலிய புதிய உள்ளடக்கத்திற்கேற்ற, மக்களது பேச்சு வழக்கிற்கு நெருங்கிய நடையில் அவை எழுதப்பட்டன. பெரும்பான்மை யான செப்பேடுகள் பிராமணர்களுக்கும் சமணப்பள்ளிகளுக் கும் அளிக்கப்பட்ட அறக்கொடைகளின் ஆவணங்களாதலால், அவர்களுக்குப் பழக்கமான சொற்கள் மிகுதியாக வருகின்றன. சமயத் தொடர்புடைய சொற்கள் சம்ஸ்கிருதமாகவோ, தமிழ் அருஞ்சொல்லாகவோ இருப்பதைக் காணலாம். இவை மக்களுக்கு விளங்காவிடினும், தானம் பெறுவோருக்கு விளங்கக் கூடியவையே.

இவ்வாறு, கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஐந்தாம் நூற்றாண்டுடன் முடியும் காலத்தில் இரு வகையான உரை நடைகள் தோன்றின. ஒன்று இலக்கிய வழக்கு; மற்றொன்று உலகியல் வழக்கு. முதலாவது, இலக்கியம் கற்றறிந்தோருக் காகவும், இரண்டாவது, இலக்கிய அறிவில்லாத கிராமப் பொதுமக்கள் அறிந்துகொள்ளுவதற்காகவும் தோன்றியவை.

**களவியல் உரை**

இவ்விரண்டு நடைகளும் ஒன்பதாம் நூற்றாண்டு வரை பெரிதும் வளர்ச்சி பெற்றன. இலக்கிய உரைநடை ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய களவியல் உரையில் வளர்ச்சி பெற்ற நிலையில் காணப்படுகிறது.

# இடைக் காலம்

பல்லவர் காலத்தையொட்டி வேளாண்மை வளர்ச்சி ஏற்பட்டது. நீர்ப்பாசன வளர்ச்சியால் பரவலாக விரிவுபடுத்தப் பட்ட விவசாயப் பொருளாதாரம் மக்கள் வாழ்க்கையில் பல மாறுதல்களை உருவாக்கியது.

தொல்காப்பியர் காலத்து வாழ்க்கை முறை மாறிய பின்னர், தொல்காப்பியப் பொருள் இலக்கணச் சூத்திரங்கள் பழமையானவையாயின. இலக்கிய மரபில் புது மரபுகள் தோன்றின. எனவே, பொருட்பால் சூத்திரங்களில் பழமையானவற்றை விவரிக்கவும், புதுமையானவற்றைப் புகுத்தவும் தேவை தோன்றியது. எனவே பழைய கருத்துக்களின் விளக்கமாகவும் புதிய கருத்துக்களின் முன்னுரையாகவும், களவியலுரையாசிரியர் உரைநடையைப் பயன்படுத்தினார். அவர் நடைக்கு ஓர் எடுத்துக்காட்டுக் காட்டுவோம்.

> இனிக் காமம் நன்றாமாறும் உண்டு. சுவர்க்கத்தின் கண் சென்று போகம் துய்ப்பல் என்றும், உத்தரகுருவின் கண் சென்று போகம் துய்ப்பல் என்றும், நன்ஞானம் பெற்று வீடு பெறுவல் என்றும், தெய்வத்தை வழிபடுவல் என்றும், எழுந்த காமம் கண்டாயன்றோ? மேன் மக்களாலும் புகழப்பட்டு மறுமைக்கும் உறுதி பயக்கும் ஆதலின் இக்காமம் பெரிதும் உறுதி உடைத்தென்பது.

இது இலக்கிய நடை. ஆயினும் இது, தருக்க முறையில் சிந்தனைத் தெளிவோடு கருத்துக்களை வெளியிடும் ஆற்றல் பெற்றுள்ளது. இதன் பொருளடக்கம் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பிருந்து, உரையாசிரியர் காலம் வரை டழகி வந்த அகப்பொருள் நிகழ்ச்சிகளே.

அக்காலத்திலேயே பாண்டியர் கல்வெட்டுக்களும் பல்லவர் கல்வெட்டுக்களும், உரைநடையை எளிதாக்கியுள்ளன. பல புதிய சமுதாய மாற்றங்களால் தோன்றிய கருத்துக்களையும் நிகழ்ச்சிகளையும் விளக்கும் முறையிம் உலகியல் உரைநடையும் வளர்ச்சி பெற்றது.

## சோழர் காலக் கல்வெட்டுகளில் உரைநடை

சோழப் பேரரசின் வளர்ச்சிக் காலத்தில் அரசியல் அமைப்புக்களும் கிராம ஆட்சிமுறையும் தோன்றின. பல புதிய நில உறவுகளும் வரி விதிப்பு முறைகளும் நீதிநெறி முறைகளும் உருவாயின. பணப் புழக்கமும் அதிகரித்தது. இச்சூழ்நிலையில் தோன்றிய ஆணைகளையும் முடிவுகளையும் வெளியிட உரைநடை கையாளப் பெற்றது. கோயில் மதிற் சுவர்களில் ஆவணங்களை எழுதிவைக்கும் வழக்கம் முன்காலத்தைவிடப் பெரிதும் அதிகமாயிற்று. இவ்வாவணங்கள் செம்பிலும் செதுக்கப்பெற்றன. முக்கியமான உரிமைகளை வரையறுத்துக் கூறும் ஆவணங்கள் தவிர, பொது மக்களிடையே நிகழும் ஒப்பந்த இசைவுத் தீட்டுக்கள் பனையோலை மீது வரையப்பட்டன. அக்காலத்துப் பனையோலை ஏடுகள் எவையும் தற்காலத்தில் கிடைக்கவில்லை.

சோழர் காலத்தில் முற்காலப் பிராமி எழுத்துக்களும் வட்டெழுத்துக்களும் மறைந்து, புதிய சோழர் எழுத்துக்கள் தோன்றின. இவற்றின் எளிமை காரணமாக, எழுத்தறிவு பரவியது.

உரைநடையின் போக்கை அறிவதற்காகக் கால வரிசைப்படி, சில சோழர் சாசனங்களைக் கீழே தருவோம். அவை கி.பி. 919 முதல் 1245 வரையுள்ள காலத்தில் உரைநடை வளர்ந்துவந்த முறையைக் காட்டுவன.

### உத்திரமேரூர்க் கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ மதுரைகொண்ட கோப்பரகேசரி வன்மர்க்கு
யாண்டு பனிரண்டாவது உத்திரமேருச் சதுர்வேதி
மங்கலத்துச் சபையோம் இவ்வாண்டு முதல் எங்கள்
ஊர் ஸ்ரீமுகப்படி ஆணை

இதனால் தத்தனூர் மூவேந்த வேளான் இருந்து வாரியம்
ஆக ஆட்டொருக்காலும் சம்வத்சர வாரியமும் தோட்ட
வாரியமும் ஏரி வாரியமும் இடுவதற்கு வியவஸ்தை செய்

த பரிசாவது குடும்பு முப்பதாய் முப்பது குடும்பிலும்
அவ்வக்குடும்பிலாரேய் கூடி கானிலத்துக்கு மேல் இறை
நிலம் உடையான் தன் மனையிலே அ

கம் எடுத்துக்கொண்டு இருப்பானை அறுபது பிராயத்
துக்கு உள் முப்பது பிராயத்துக்கு மேல் பட்டார் வேதத்
திலும் சாஸ்திரத்திலும் காரியத்திலும் நிபுணர் என்னப்
பட்டி

ருப்பாரை அர்த்த சௌசமும் ஆத்ம சௌசமும் உடைய
ராய் மூவாட்டின் இப்புறம் வாரியம் செய்திலாதார்
வாரியம் செய்தொழிந்த பெருமக்களுக்கு
அணைய பந்துக்கள் அல்லாதாராய் குடவோலைக்குப்
பேர் தீட்டி சேரிவழியே திரட்டி பன்னிரண்டு சேரியிலும்
சேரியால் ஒரு பேராம் ஆறு ஏதும் உருவறியாதான் ஒரு
பாலனைக் கொண்டு குடவோலை வாங்குவித்து பன்னிரு
வரும் சம்வத்ஸர வாரியம் ஆவதாகவும் அதன் பின்பே
தோட்ட வாரியத்துக்கு மேல்படி குடவோ நசி
லை வாங்கி பன்னிருவரும் தோட்ட வாரியம் ஆவதாகவும்
நின்ற அறுகுட வோலையும் ஏரி வாரியம் ஆ
வதாகவும் முப்பது குடவோலை பறிச்சு வாரியம் செய்
கின்ற மூன்று திறத்து வாரியமும் முன்னூற்று அறுபது
நாளும் நிரம்ப வாரியம் ஒழிந்த அனந்தரம் இடும் வாரி
யங்கள் இவ்வியவஸ்தை ஓலைப்படியே குடும்புக்கு குட
வோலையிட்டு குடவோலை பறிச்சுக் கொண்டேய் வாரி
யம் இடுவதாகவும் வாரியம் செய்தார்க்கு பந்துக்களும்
சேரிகளில் அனோன்யமே அவரு
ம்ஂகுடவோலையில் எழுதி பேர் இடப்படாதார் ஆகவும்
பஞ்சவார வாரியத்திற்கும் பொன் வாரியத்திற்கும்
முப்பது குடும்பிலும் முப்பது குடவோலையிட்டு சேரி
யால் ஒருத்தரை குடவோலை பறித்து பன்னிருவரிலும்
அறுவர் பஞ்சவார வாரியம் ஆவதாகவும் அறுவர்
பொன் வாரியம் ஆவதாகவும் சம்வத்சர வாரியம்
அல்லாத
வாரியங்கள் ஒரு கால் செய்தாரை பின்னை அவ்வாரியத்
துக்கு குடவோலை இடப் பெறாதாகவும் இப்பரிசேய்
இவ்வாண்டு முதல் சந்திராதித்தவத் என்னும் குட
வோலை வாரியமேய் இடுவதாக தேவேந்திரன் சக்கிர
வர்த்தி ஸ்ரீவீரநாராயணன் ஸ்ரீபராந்தக தேவர் ஆகிய
பரகேசரிவர்மர் ஸ்ரீமுகம் அருளிச் செய்து வரக்காட்ட
ஸ்ரீ ஆக்ஞையினால் தத்தனூர் மூவேந்த வேளாண் உடன்
இருக்க நம் கிராமத்து துஷ்டர் கெட்டு சிஷ்டர் வர்த்தித்
திடுவாராக வியவஸ்தை செய்தோம் உத்திரமேரு
சதுர்வேதி மங்கலத்துக்குச் சபையோம்.

இக்கல்வெட்டு கி.பி. 919இல் முதற் பராந்தக சோழன் காலத்தில் வரையப்பட்டது. இது உத்திரமேரூர் சபையார் சம்வத்சர வாரியம், தோட்ட வாரியம், ஏரி வாரியம், பஞ்ச வார வாரியம், பொன் வாரியம் ஆகிய நிறைவேற்றுக் கழகங்

களை நிறுவுதற்குரிய விதிகளையும் முறைகளையும் எடுத்துணர்த்துகிறது. இவை போன்ற கல்வெட்டுகள் பல அவ்வரசன் காலத்தில் வரையப்பட்டுள்ளன. அவன் காலத்திற்றான் இவ்வமைப்புகள் நிறுவப்பட்டிருக்கவேண்டும். இப்புதிய முறைகளை விளக்கவும் விதிமுறைகளைத் தெளிவாக வரையறுக்கவும் உரைநடை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வுரைநடையில் தெளிவும் செறிவும் விளங்கக் காண்கிறோம்.

இக்கல்வெட்டில் கூறப்பட்ட விதிகளின்படி குடவோலை முறை மூன்று நூற்றாண்டு காலம் வழக்கிலிருக்கும்பொழுது அதிகாரத்தைச் சிலர் தவறாகப் பயன்படுத்தியிருக்கவேண்டும். வரி வசூலில் ஊழல்கள் தோன்றியிருக்கவேண்டும். குடவோலை பறிக்கப்படுவதற்குத் தகுதியுடையோர் அதிகமாக மூன்றாம் இராசராசனது காலத்தில் விதிமுறைகளை மாற்றிச் சேய்ஞலூர் சபையார் ஒரு சாசனம் வெளியிட்டிருக்கிறார்கள். அது மூன்று நூற்றாண்டுகளில் உரைநடையில் தோன்றிய மாறுதல்களைக் காட்டுகிறது. இக்கல்வெட்டு கி. பி. 1245 செப்டம்பர் 23ஆம் நாள் வெளியிடப்பட்டது.

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கிரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு முப்பதாவது கன்னி நாயற்றுப் பூர்வபட்சத்து பிரதமையும் சனிக்கிழமையும் பெற்ற சித்திரை நாள் விருதராஜ பயங்கர வளநாட்டு மிழலை நாட்டு சேய்ஞலூர் உடையார் விஸ்வேஸ்வர தேவர் கோயில்

மூலபருஷையர் கூட்டங் குறைவறக் கூடியிருந்து கிராம காரியம் வியவஸ்தை பண்ணினபடி நம்மூர்க் கூட்டம் இடுமிடத்து ஒரு ஸம்வத்ஸரஞ் செய்தார் அஞ்சாம் வத்ஸரஞ் செய்யவும் புத்ரர்கள் நாலாம் வத்ஸரம் செய்யவும் ப்ராதாக்கள் மூன்றாம் வத்ஸர

ஞ் செய்யக் கடவதாகவும் அனாதியாக வியவஸ்தையுண்டாகையில் இந்த வியவஸ்தைப்படியே செய்யவும் இப்படிச் செய்யுமிடத்து நாற்பது வயஸ்ஸில் தாழாதாரைப் பார்த்து இடவும் இப்படி கூட்டமிடுமிடத்து ஊராகத் திரண்டிருந்து இராஜகீய

மான நாளில் பூர்வ புருஷர்கள் செய்தபடிக்கீடாக ஆமென்ன இடக்கடவதாகவும் இப்படி தவிர முதலிகள்ளுடனே கூடி நின்று உள்வரிக் கூட்டம் புகுதல் வியவஸ்தைப்படியைத் தவிரப் புகுதல் செய்தாருண்டாகில் கிராம துரோகிகளாய் இவர்களை ஸர்வஸ்வ ஹரணம்

பண்ணக்கடவதாகவும் இப்படிக் கூட்டம் செய்யுமிடத்து
ஸம்வத்ஸர வரணமாகச் செய்யவும் மேற்பட நின்றா
ருண்டாகில் கிராமதுரோகிகளாய் இப்படி தண்டித
ராகக் கடவர்களாகவும் இப்படி வியவஸ்தைப்படி
கூட்டம் செய்யுமிவர்கள் நம்மூர் கடமை குடிமையும்
சபாவிநியோகமும் வரிக் கொள்ளுமிடத்து பிராப்தமான
படிக்கு மேற்பட்ட வரி கொள்ளாதொழியக்கடவார்
களாகவும் சபாவிநியோகம் குடிமையுடன் கூட்டாதே
தனியே வரிக்கொண்டு கணக்கனுக்கு நியோகமெழுதிக்
குடுத்து நியோகப்படியே செலவழிக்கக் கடவ
தாகவும் செலவழிக்குமிடத்துக்கு ஒரு பொருளுக்கு
இரண்டாயிரம் காசுக்கு மேற்பட்டதுண்டாகில் மஹா
சபாநியோக மெழுதிக்கொண்டு செலவழிக்கக் கடவர்
களாகவும் இப்படித் தவிரச் செலவழித்ததுண்டாகிலும்
ஏற வரிக் கொண்டதுண்டாகிலும் வரிக் கோளுக்கு
நியோகம் எழுதின சபை....க வாசறுதியாக ஒன்றுக்கு
அஞ்சாக வந்த காசும் பேர்வழி சிகை கிடந்த பேர்களி
ரட்டியாக வந்த காசும் தண்டி சபாவிநியோகத்துக்குச்
செலவழிக்கக் கடவதாகவும், ஊர்க்கணக்கும் வாரியமும்
குடும்பும் ஆண்டு மாறி நியோகப்படி நிற்கக் கட
வதாகவும் மூலபருஷையார்......மூவரின் வியவஸ்தை இவ்
வூருடையர் திருவிரவீஸ்வரம் உடையார் கோயில் திரு
நடை மாளிகையிலே இப்படிக் கல்வெட்டக் கடவதாக
நிச்சயித்து இப்படி வியவஸ்தை பண்ணினோம் பணிப்
பணியால் ஊர்க்கணக்கு சாத்தனூருடையான் பண்டித
பிரியன் எழுத்து இவை பணிப்பணியால் ஊர்க்கணக்கு
சேய்ஞலூருடையான் அலங்காரப்பிரியன் எழுத்து
இவை பணிப்பணியால் ஊர்க்கணக்கு இலங்கூருடை
யான் மூலபரிஷைப்பிரியன் எழுத்து இவை பணிப்பணி
யால் ஊர்க்கணக்குக் காட்டுடையனார் பட்டப்பிரி
யன் எழுத்து ஸ்வஸ்திஸ்ரீ

இக்கல்வெட்டில் காணப்படும் முடிவு, பண்டைய விதிகளில் சில மாறுதல்களைச் செய்கிறது. மாற்றிய விதியை மீறுவோருக்குத் தண்டனைகள் இவையெனச் சுட்டிக்காட்டுகிறது. முதல் பகுதியைத் திருத்தம் (amendment) எனவும், இரண்டாம் பிரிவைத் தண்டனைப்பகுதி (Penal clause) என்றும் கூறலாம். இவ்விதிகள் கிராமச் சபையினாலே இயற்றப்பெற்றன. அரசன் ஆணையினால் அன்று. விதிவகுப்பு முறைகளையும், அதனை மாற்றும் முறைகளையும் விதியினை மீறியவர்களுக்குத்

தண்டனைகள் அளிப்பதையும் தற்காலச் சட்டங்களைப்போல இக்கல்வெட்டுக் கூறுகிறது. முதற் கல்வெட்டுக் காலத்திற்குப் பின் சபையின் அலுவல்கள் விரிவடைந்துவிட்டன. அதனை யொட்டிச் சபையின் ஆளுங்கணங்களின் பணிகளைச் செய்வோரது பொறுப்புகளும் அதிகாரமும் மிகுதியாயின. அதனை ஒழுங்குபடுத்தக் குடவோலை முறை விதிகள் மாற்றப் பட்டன. பழைய விதிகளை அனுசரிக்கும்பொழுது ஏற்பட்ட அனுபவங்களைக் கருத்தில் கொண்டு, விதிகளை மீறுவோர் மீது கடுந்தண்டனை விதிக்கப் புதிய விதிகள் இயற்றப் பட்டன. இவை யாவும் கிராம வாழ்க்கையில் வழங்கிய சொற்களாலும் சொற்றொடர்களாலும் தொகுக்கப் பெற் றுள்ளன. புதிய கருத்துக்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களோ. சம்ஸ்கிருதச் சொற்களோ தேர்ந்தெடுத்துக் கொள்ளப்பட்டன.

எடுத்துக்காட்டாகக் கூட்டம் இடுதல் (to assemble)[8] நாற்பது வயசில் தாழாதார் (not less than forty years of age), செய்தபடிக் கீடாக (substituting an amendment), புகுதல், செய்தார் (to gain entry into power illegally), பணிப்பணி யால் (by order), ஏற்ற வரி கொண்டது (excess taxation) போன்ற தமிழ்ச் சொற்கள் பயன்படுத்தப்பட்டன. இனி சம்ஸ்கிருதச் சொற்களும் புதிய கருத்துக்களை வெளியிடப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை, மூலபருஷை (கோயிலை நிருவகிக்கும் குழுவினர்), ஸம்வத்ஸரம் (360 நாட்கள். இது ஆண்டிலிருந்து வேறுபட்ட பொருளில் வழங்கும். குடவோலை நாளிலிருந்து 360 நாட்களைக் குறிக்கும்). நியோகம் (records), சபாவிநியோகம் (accounts of the sabha), ப்ராப்தமரானபடிக்கு (legally fixed) ஆகியவையாகும். ஆய்வுத் துறையில் உரைநடை வளர்ச்சி பெற்ற முறைக்கு இக் கல்வெட்டு வாசகங்கள் எடுத்துக்காட்டுகளாகும்.

## குறள் உரைகள்

சோழர் கால இறுதியிலும், அதற்குப் பின்னும் பழங்கால இலக்கிய இலக்கண நூல்களையும் சமய நூல்களையும் கற்கும் பேரார்வம் தோன்றியது. சங்க நூல்கள் சிலவற்றிற்கும் திருக் குறளுக்கும் சீவகசிந்தாமணிக்கும் திருக்கோவையாருக்கும் சிறந்த உரைகள் தோன்றின. இவ்வுரையாசிரியர்கள் புலமை மிக்கவர்கள். நூல்களைக் கற்க விரும்பும் மாணவர்களுக்கு நேரில் கற்பிக்கும் முறையிலேயே அவர்கள் உரையெழுதினார் கள். அவ்வுரைகளில் தருக்க முறைப்பட்ட விவாதங்களும் போதனா முறைப்பட்ட விளக்கங்களும் காணப்படுகின்றன.

இவ்வுரை நடையின் நோக்கம் தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் சமய நூல்களையும் கற்கும் ஆர்வம் உடையவர்களுக்கு அந்நூல்களை விளக்கிக் கூறுதலே. எனவே, இக்காலத்தில் எழுந்த உரை நடை புலமை மிக்க உரை நடையாகும்.

**கருத்து விளக்கம்—மதிப்பீட்டு விளக்கம்**

இவ்வுரை நடைகள் ஆசிரியரது புலமைக்கும் போதனைத் திறனுக்கும் கொள்கைகளுக்கும் ஏற்றவாறு வேறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக, திருக்குறள் உரையாசிரியர்களது உரைநடையை இருவகைப்படுத்திக் கூறலாம். மணக்குடவர், காலிங்கர், பரிதியார் ஆகியோர் முதலாசிரியரது கருத்துணர்ந்து விளக்கம் கூற முயன்றனர். இதனைக் கருத்து விளக்கம் (elucidation) என்று கூறலாம். பரிமேலழகர் தமது கொள்கைகளின்படி ஆசிரியர் கருத்தை மதிப்பிட்டு, அதனையே ஆசிரியர் கருத்தாகக் கூறுகிறார். இம்முறையை மதிப்பீட்டு விளக்கம் (Interpretation) என்று கூறலாம்.

குறள் உரையாசிரியர்களின் நடை வேறுபாட்டை அறிதற்காகச் சில எடுத்துக்காட்டுகளை இங்குக் குறிப்பிடுவோம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் (50)

**பரிமேலழகர்**—இல்லறத்தோடு கூடி வாழும் இயல்பினால் வையத்தின்கண் வாழ்பவன் வையத்தானே எனினும் வானின்கண் உறையும் தேவருள் ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படும் என்றவாறு.

பின் தேவனாய் அவ்வறப் பயனுகர்தல் ஒருதலையாதலின் 'தெய்வத்துள் வைக்கப்படும்' என்றார். இதனால் இல்நிலையது மறுமைப்பயன் கூறப்பட்டது.

**மணக்குடவர்**—இல்வாழ்க்கை வாழும் படியிலே வாழுமவன் உலகத்திலே தேவருள் ஒருவனாக மதிக்கப்படுவன்.

**பரிதியார்**—பூமியிலே இல்லறம் நடத்தும் முறையாலே நடப்பவன் தேவர்க்கு நிகரானவன் என்றவாறு.

பரிமேலழகர் உரையில் முற்கூறிய, தன் கொள்கையின் நோக்கில் பிறர் வாக்கைக் காணும் குறையுள்ளது. இது பின்னவர்களிடம் இல்லை. சுருக்கமாகவும் எளியதாகவும் இவர்கள் உரைநடை அமைந்துள்ளது. இவர்கள், வலிந்து பொருள் கூறாது, நேர்பொருள் கூறுகிறார்கள்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று (236)

**பரிமேலழகர்**—மக்களாய்ப் பிறக்கின் புகழுக்கு ஏதுவாகிய குணத்தோடு பிறக்க; அக்குணமில்லாதார் மக்களாய்ப் பிறத்தலின் விலங்காய்ப் பிறத்தல் நன்று என்றவாறு.

'புகழ்' ஈண்டு ஆகுபெயர். அஃதிலார் என்றமையின்; மக்களாய்ப் பிறவாமை என்ற அருத்தாபத்தியான் விலங்காய்ப் பிறத்தல் என்பதூஉம் பெற்றாம். இகழ்வார் இன்மையின் நன்று என்றார்.

**மணக்குடவர்**—பிறக்கின் புகழுண்டாகப் பிறக்க; அஃதிலார் பிறக்குமதின் பிறவாமை நன்று என்றவாறு. இது புகழ்பட வாழவேண்டும் என்றது.

**பரிதியார்**—பிறந்தால் புகழுடனே வாழவேணும். அந்த நெறியில்லாதார் பிறப்பதிற் பிறவாமலிருப்பதே நன்று என்றவாறு

**காலிங்கர்**—ஒருவர் தம் புகழ் பரப்புவதாகப் பழியினை நீக்கிப் புகழ் பெறுதலே தோற்றமாவது; அஃதிலார் நானிலத்தின் கண் தாம் ஒரு மக்கள் உருவு கொண்டு தோன்றுதலின் இறந்துபடுதலே பெரிதும் நன்மையுடைத்து என்றவாறு.

மேற்கூறிய விமரிசனம் இவ்வுரைகளுக்கும் பொருந்தும்.

## சமய நூல் உரைகள்

தர்க்கரீதியான விவாதங்களுக்குப் பொருத்தமான உரைநடை நீலகேசியிலும் மற்றைச் சமண நூல்களிலும் காணப்படுகிறது. சைவ சமய உரை நூல்களும் விவாத நடையைப் பயன்படுத்துகின்றன. இந்நூல்களில், பரபக்க நிராகரணமும் சுபக்க ஸ்தாபனமும் ஆகிய இரு பகுதிகள் இருக்கின்றன. முதலாவது எதிரிகள் கருத்தைத் தகர்ப்பது. இரண்டாவது தன் கருத்தை நிறுவுவது.

இரண்டினுக்கும், எதிரி கருத்துக்களைக் கூறும் நூலறிவும் தன் பக்கம் கூறும் நூலறிவும் இருத்தல் வேண்டும். அதனோடு அளவை நூல் பயிற்சியும் வேண்டும். இவ்வுரைகள், தத்துவக் கருத்துக்களைத் தருக்க முறையில் மறுக்கவும் நிறுவவும் ஒரு தனியான உரைநடையைக் கையாளுகின்றன. இதனைத் தத்துவ விளக்க நடையென்று கூறலாம்.

மொக்கலனவாதச் சருக்கத்தில், "உயிரும் ஆன்மாவும் இல்லை. ஸ்கந்தச் சேர்க்கையே உணர்வு" என்ற மொக்கல னுக்கு நீலகேசி கூறும் விடை வருமாறு:

> துர்க்காதியும், வியவஹாராதியும் காட்டுதற்கு யாப் புண்டால் உழப்பதவ்வுயிரென்றேனாக, சரீரங்கட்டுண்ண ஜீவன் வருந்தும் என்று நீர் சொல்லுமது எருது காலொடி யக் கழுதை முடவினதொக்குமென்று நீ சொல்லிய குற்றம் சரீராத்மாக்கள் தீட்டொட்டுக் கலப்பு வகையால் சம்பந்தித்து நிற்குமென்று சொல்லுதலின் எமக்காகாது. ரூபஸ்கந்தத்தி யாப்பும், வேதனாஸ்கந்தத்தின் வேதனை யும், ம்ஸ்கர ஸ்கந்தத்து ஆக்ரோஷமும் என்று சொல்லு கின்ற நுமக்கே யக்குற்றமென்பது. நீ இவற்றை அத்யந்தம் பின்னமென்று சொல்லுதியாதலின் ஒருத்தன் புண்பட, ஒருத்தன் துன்புற, ஒருவன் கூப்பிடுமென்பதுன் தத்துவ மல்லவோ என்றவாறு.

புத்தவாதச் சருக்கத்தில் 'இச்சையையும் உணர்வையும்' பற்றிப் புத்தன் கூறிய வாதத்திற்கு நீலகேசி மறுப்புக் கூறும் பகுதி வருமாறு:

> இச்சை தானும் க்ஷணவர்த்தியாதலால் பிறந்த க்ஷணத்தே கெடுவதல்லது உணர்வைப் பிறப்பித்தற்குச் சக்தமாகாது. கறக்கின்ற பால் கறக்கக் கறக்க பாண்டத் தில் சுவறுமாயிற் பால், தயிர், மோர், நெய் என்பன சம்பி விக்குமோ?
>
> உணர்வுகளெல்லாம் இச்சானு ரூபமாய்ப் பிறக்கு மென்று சொய்லுதலால், இச்சை உணர்வுக்கு முன்னேயுள தாதல் வேண்டும். அஃதாயில் அந்த இச்சை யாங்கணுளது? சரீரத்ததெனில் சுசேதனமாகிய சரீரத்தில் இச்சை கூடா தாம். கூடில் பிருத்வியாதியிலும் இச்சையுளதாகல் வேண் டும். இனி இச்சை ஞானத்ததெனில் இச்சை முன்பேயுண் டாயினல்லது ஞானம் பிறவாமையால் ஞானத்துக்கு இச்சையுண்டாதல் கூடாதாம். இனி இந்த பிரஸ்துதமான இச்சை பிறிதொரு இச்சையிற் பிறக்குமெனில், அதற்குச் சொல்லிய குற்றம் வரும். அதற்குமொரு இச்சை யென்ப தொன்று பெறப்படாமையால் இச்சையால் பிறப்பதாகிய ஞானமும் பெறப்படாதாயந்த ஞானத்தால் வருவன வாகிய சம்ஸ்கார வேதனைகளுமிலவாகிச் சூன்யமா மென்று சொல்லாதவாறென்னோ?

## கற்பிக்கும் முறை உரைநடை

இலக்கிய இலக்கண உரைகளின் நடை, ஆசிரியன், மாணவனுக்குக் கற்பிக்கும் போக்கிலேயே வாய்மொழிப் போதனையின் செல்வாக்கு மிகுதியும் பெற்று விளங்குகிறது. ஆசிரியன் ஒரு பொருளை விளக்கும்பொழுது, மாணவனுக்குத் தோன்றக் கூடிய ஐயங்களை உணர்ந்து, அவற்றைக் கூறி, விளக்கமும் கூறும் விதத்தில் இவ்வுரையின் நடைப்போக்கு அமைந்துள்ளது. இதனைக் கற்பிக்கும் நடையென்று கூறலாம். இதற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருவோம்.

**பேராசிரியர்**

குடிமையொடு பிறப்பிடை வேற்றுமை என்னை எனின், பிறப்பு என்பது குடிப் பிறத்தல்; அதற்குத்தக்க ஒழுக்கம், குடிமை எனப்படும்; குடிப் பிறந்தாரது தன்மையைக் குடிமை என்றார் என்பது; அது ஊராண்மை எனவும் சொல்லுப. ஆண்மை புருடர்க்காம். அது ஆள் வினை எனப்படும். இது தலைமகட்கு ஒப்பது அன்றால் எனின், குடியாண்மை என்புழி ஆண்மை என்பது இரு பாற்கும் ஒக்கும் ஆதலின் அமையும் என்பது. யாண்டு என்பது ஒத்தவாறு என்னை எனின், பன்னீர் யாண்டும் பதினாறி யாண்டும் பெண்மையும் ஆண்மையும் பிறக்கும் பருவம் என்பது ஒத்தினுள் ஒப்ப முடிந்தமையின் அதுவும் ஒப்பு எனவே படும். 'உரு நிறுத்த காமவாயில்' என்பது பெண்மை வடிவும் ஆண்மை வடிவும் பிறழ்ச்சியின்றி அமைந்தவழி அவற்று மேல் நிகழும் இன்பத்திற்கு வாயிலாகிய அன்பு என்றவாறு.

**இளம்பூரணர்**

இவ்வறுவகைப் பருவமும் அறுவகைப் பொழுதும், இவ்வைந்திணைக்கு உரியவாறு என்னே எனின்—முல்லையாகிய நிலனும், வேனிற்காலத்து வெப்பம் உழந்து மரனும் புதலும் கொடியும் கவினிழந்து கிடந்தன; புயல்கள் முழங்கக் கவின் பெறும் ஆதலின், அதற்கு அது சிறந்ததாம். மாலைப்பொழுது இந்நிலத்திற்கு இன்றியமையாத முல்லை மலரும் காலம் ஆதலானும், அந்நிலத்துக் கருப்பொருளாகிய ஆனிரை வரும் காலம் ஆதலானும் ஆண்டுத் தனி இருப்பார்க்கு இவை கண்டு வருத்தம் மிகுதலின் அதுவும் சிறந்ததாயிற்று.

மேற்கூறிய இலக்கிய, இலக்கண உரைகளின் உரைநடையின் இயல்புகள் சமய நூல்களின் உரைகளிலும் காணப்படும். ஆனால், சமய நூல்களில் கற்பிக்கும் முறை உரைநடையை மாற்றி மாறுபட்ட கருத்துடையவர்களோடு விவாதிப்பதற்கேற்ற தருக்கமுறையில் உரைநடை அமைக்கப்படவேண்டியிருந்தது. நீலகேசி போன்ற நூல்களிலும் சிவஞான முனிவரது சிவஞான போத உரைகளிலும் இவ்விவாத நடையின் வளர்ச்சியைக் காண்கிறோம். இந்நூலில், பிறர் கொள்கை மறுப்பும் (பரபக்க நிராகரணம்) தன் கொள்கை நிறுவுதலும் (சுபக்க ஸ்தாபனம்) மிக முக்கியமானவை. இவ்வகையான தருக்க முறையில் பக்கங்களைக் கூற உரையாசிரியனுக்கு இரு பக்கங்களின் நூலறிவும் அளவை நூல் தேர்ச்சியும் இருத்தல்வேண்டும். தத்துவ நூல்களில் பயிலும் உரைநடையைத் தத்துவ உரைநடையென்று கூறலாம்.

## மணிப்பிரவாளம்

சமய நூல் பயிற்சியுடைய்வர்கள் தமிழும் வடமொழியும் கற்றிருந்தார்கள். அக்காலத்தில் வைணவமும் சமணமும் தென்னாட்டில் தமிழகத்திலும் மலையாளத்திலும் கர்நாடக நாட்டிலும் ஆந்திர நாட்டிலும் பரவியிருந்தன. இந்தப் பகுதிகளில் வழங்கிய மொழிகளில் சம்ஸ்கிருதச் சுலோகங்களை எழுதுவதற்குப் பொது வரிவடிவமொன்றைச் சமணர்கள் உருவாக்கினார்கள். இவ்வரிவ்டிவத்தையும் பிரதேச மொழியையும் கலந்து இருவகையான கிரந்த மொழிகளை அவர்கள் தோற்றுவித்தார்கள். இம்மொழி சம்பந்தர் காலத்திலேயே சமண சமய நூல்களை எழுதப் பயன்படுத்தப்பட்டது.

அம்மொழியை எதிர்த்துச் சம்பந்தர், "ஆரியத்தோடு செந்தமிழ்ப் பயன் அறிகிலாது உருச்சிதைத்து உரைப்பது" என்று பாடினார். முற்காலப் பல்லவர் சாசனங்களிலும் இம்மொழி பயன்படுத்தப்பட்டது. சிற்சில மாறுதல்களோடு இம்மொழிகளை அவர்கள் மூன்று மொழிகள் வழங்கும் நாடுகளிலும் சமய நூல்கள் எழுதப் பயன்படுத்தினர். தமிழ் கிரந்தம் ஒருவகையாகவும், கன்னட-தெலுங்குக் கிரந்தம் வேறு வகையாகவும் வளர்ச்சியடைந்தன. இவற்றை நெருக்கமாகக் கொணர்ந்து ஒரு நிலைப்பட்ட எழுத்து மொழியை உருவாக்கச் சமணர்கள் பெரிதும் முயன்றனர். சுருக்கமாகச் சொன்னால் ஒரு சமய இணைப்பு மொழியைத் தோற்றுவிக்க அவர்கள் முழு முயற்சி செய்தனர். சமய நூல்களைக் கற்றுக் கொள்ள மட்டுமே இம்மொழி உதவிற்று.

இதனை 'நாலாயிரத்துக்கு'த் தத்துவப் பொருள் கூற விரும்பிய வைணவ ஆசாரியர்களும் பயன்படுத்தினர். ஏனெனில் விஜயநகர ஆட்சி தென்னாட்டு மொழிகள் நான்கும் வழங்கிவந்த நாடுகளில் பரவியிருந்தது. எனவே அவர்களும் தங்கள் சமயத்திற்கு ஒரு இணைப்பு மொழியினைத் தேடினார்கள். சமணர் இதனைப் பயன்படுத்திய முறையை ஸ்ரீபுராணம், சத்திய சிந்தாமணி முதலிய நூல்களிலும், நீலகேசி, மேருமந்தர புராணம் முதலிய நூல்களின் உரைகளிலும் காணலாம். சமயத் தத்துவப் பொருள்கள் ஒரு சிலருக்கே விளங்குவனவாதலால், இந்நடை சமயப் பெரியார்களிடமும் அவர்களிடம் நேரடியாகப் பாடம் கேட்டவர்களிடமும் தேங்கி நின்றுவிட்டது.

வைணவ ஆச்சாரியார் மணிப்பிரவாளத்தைச் சமயக் கருத்து விளக்கத்திற்கும் தமிழ் நடையை, உவமைக் கதைகள் கூறவும் எழுதியுள்ளார்கள். இவையிரண்டிற்கும் கீழே எடுத்துக் காட்டுகள் தருவோம்.

> அநந்தரம் பெரியாழ்வார் திருமொழி முதலான ஆழ்வார்கள் அருளிச் செயல்களுக்கு எல்லாம் வியாக்யானம் செய்தருளி லோகத்தை வாழ்வித்தருளினார்.

> வேதார்த்தம் அறுதியிடுவது ஸம்ருதீஹாஸ புராணங்களாலே, இதிஹாஸ சிரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தால் சிறையிருந்தவள் ஏற்றம் சொல்லுகிறது. மஹாபாரதத்தால் தூதுபோனவன் ஏற்றம் சொல்லுகிறது.

குருபரம்பரா பிரபாவத்தில் மணிப்பிரவாளத்தைத் தத்துவ விளக்கத்திற்கும், தமிழைக் கதையும் வரலாறும் சொல்லுவதற்கும் ஆசிரியர் பயன்படுத்துகிறார். ஆண்டாள், தான், திருமாலுக்கு ஏற்றவள்தானா என்று மதிப்பிடுவதற்காக அணிகலன்கள் பூண்டு கண்ணாடியில் தன் உருவத்தைக் காணும் காட்சியைப் பின்வருமாறு குருபரம்பராப் பிரபாவம் கூறுகிறது. இதில் வருணனைத் தமிழ் நடையே பயன்படுத்தப் பட்டுள்ளது.

> ஆழ்வார் இல்லாத அவசரங்களிலே கட்டி வைத்திருக்கும் மாலைகளை எடுத்துச் சூடிக்கொண்டு, இந்த வட பெருங்கோயிலுடையானுக்கு நேர் ஒவ்வாதிருக்கிறேனோ, ஒத்திருக்கிறேனோ, என்னும் சொல்வினைத்து, காரை பூண்டு, கூரை உடுத்து, சூடகம் அணிந்து, தோள்வளை தரித்து, கைவளை குலுக்கி, காலில் சிலம்பும் பாடகமும் அணிந்து, அஞ்சனம் தீட்டி, செவ்வாய் திருத்தி

அசைந்து, அசைந்த ஒப்பனை அழகை அங்குள்ள கண்ணாடியிலேயே கண்டு இதயம் குளிர்ந்து அந்தரங் களைந்து அவை தம்மை முன் இருந்தபடியே வைத்து விட்டு வேறு கைங்கர்யத்தில் ஈடுபட்டிருப்பர்.

ஆழ்வாரும் திருமகளாரும் அதிப்பிரீதியுடன் அங் கிருந்தும் புறப்பட்டு திருவரங்கன் திருப்பதியுள் எழுந் தருளினவாறே 'ஆடிக்கொடுத்தாள் வந்தாள், சுரும்பார் குழற்கோதை வந்தாள், ஆண்டாள் வந்தாள், ஆழ்வார் திருமகளார் வந்தாள், திருப்பாவை பாடிய செல்வி வந் தாள், தென்னரங்கம் தொழும் தேவி வந்தாள்' என்று பல சின்னங்கள் பரிமாற எழுந்தருளுவித்துக் கொண்ட அழகிய மணவாளன் திருமண்டபத்துள் சென்று, நின்று திருப்பலக் கின் பட்டுத்திரையை வாங்க, அப்போதே நாச்சியார் அகிலம் காண உதறி உடுத்த பட்டுச்சேலையும், பருத்த செங்கழுநீர் மாலையும், திருநுதல் கஸ்தூரி நாமமும், கயல் போல் மிளிர்ந்து காதளவோடிய கடைக்கண் விழியும் ப்ரகாசிக்க, சிலம்பார்ப்ப, சீரார் வளை ஒலிப்ப அன்ன மென்னடை கொண்டு அணி அரங்கத்தான் திருமுன்பே சென்று கண்ணாரக் கண்டு களித்துக் கேசவ நம்பியைக் கால் பிடிப்பாள் என்னும் பேர் பெற்று உள்ளே புகுந்து நாகபர்யங்கத்தை மிதித்தேறித் திருவரங்கச் செல்வனைச் சேர்ந்து அவன் திருவடிகளிலே அந்தர்ப்பவித்தருளினார்.

கதைகள் கூறும் பகுதி தமிழிலேயே எளிதான அழகிய நடையில் எழுதப்பட்டது. சமயக் கருத்துக்கள் மணிப்பிர வாளத்தில் எழுதப்பட்டன.

இந்த நடையை முதலில் உருவாக்கிப் பயன்படுத்தியவர் கள் சமணர்களே. இவர்கள் கர்நாடகம், தமிழ், ஆந்திரம் முதலிய மூன்று மொழிப் பகுதிகளிலும் வாழ்ந்த தமது சமயங் களுக்குப் போதனை செய்யப் பொதுவான சமயக் கருத்துக் களைக் கிரந்தத்திலும், அவ்வப்பகுதிகளில் வாழும் மக்களுக்குத் தெரிந்த கதைகளைத் தமிழ், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளிலும் எழுதினார்கள். பல்லவர் கால ஆட்சிப் பகுதி மூன்று மொழி பேசுகிறவர்களைக் கொண்டிருந்தது போல, சோழர் காலத்திலும் மும்மொழி பேசுவோர் அவர் ஆட்சி எல்லைக்குள் வாழ்ந்தனர். இதனால் தமது சமயத்தைப் பரப்ப விரும்பிய சமணரும் வைணவரும் சமயத் தொடர்பு மொழி யாக மணிப்பிரவாளத்தைப் பயன்படுத்தினர்.

# புதிய துறைகளில் உரைநடை

பதினாறாம் நூற்றாண்டின் இடையில் உரைநடையில் ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டது. உரைநடையைப் பயன் படுத்தும் நோக்கம் புதியதோர் துறையாகக் கத்தோலிக்கச் சமயப் பிரச்சாரத்திற்குச் சென்றதே அதன் காரணமாகும்.

அக்காலத்தில் அச்சு இயந்திரம் தமிழ் நாட்டிற்கு ஆண் டிருகு ஆண்ட்ரூஸ் என்ற கத்தோலிக்கச் சாமியாரால் கொண்டு வரப்பட்டது. மரக்கட்டையினால் அச்சுக்கள் செய்யப்பட் டன. கொல்லத்தில் முதன் முதலாகக் கிறிஸ்தவ ஜபநூல் அச்சிடப்பட்டது. அதற்குக் 'கிறிஸ்தியானி வணக்கம்' என்று பெயர்.

இதன் பிறகு, ஆண்டிருகு ஆண்ட்ரூஸ் சாமியார் தாம் வாழ்ந்த தூத்துக்குடியில் அச்சு இயந்திரத்தை நிறுவினார்.

அச்சமயம் கத்தோலிக்கர்களாக மாறியிருந்த கடற்கரை மக்களான பரதவர் எழுத்தறிவு இல்லாதவர்கள். புனித சேவி யர் என்னும் பாதிரியார் அவர்களுக்குக் கிறித்தவ வணக் கத்தைத் தமிழில் மனப்பாடம் செய்யக் கற்றுக்கொடுத்தார். சிறுவர்களுக்கு ஆண்டிருகு ஆண்ட்ரூஸ் தமிழ் எழுத்தைக் கற் பித்தார். பெரியவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. எனினும் அடியார் வரலாறு (Lives of Saints) என்ற நூலை ஆண்ட்ரூஸ் சாமியார் அச்சிட்டார். இதுவே தமிழில் முதலாக வெளிவந்த நீண்ட உரைநடை நூலாகும்.

மேற்கூறிய நிலைமைகளில், நூலில் பரதவர் பேச்சுத் தமிழையொட்டியே அடிகள் நூலை எழுதினார். அவரே கொச்சை கலந்த தமிழைத்தான் அறிந்திருந்தார். எனவே, அதனைச் சிறிது திருத்தியே தமிழ் நடையை அமைத்தார். பரதவர்களுக்கு நாட்டுப் பாடல்களிலுள்ள புராணக் கதைகள் தான் தெரிந்திருந்தன. எனவே பாதிரியார், புராணக் கதை களின் நடையிலேயே கிறித்தவ அடியார் வரலாறுகளை எழுதி னார். அந்த நடை தனிமையான பேச்சு நடையாக இருந்தது. எழுத்தறிந்த பரதவர் படிப்பதற்கேற்றவாறும் இருந்தது.

இக்காலத்திற்குப் பின் டிநோபிலி, பெஸ்கி முதலியவர்கள் தமிழில் எழுதினார்கள். அவர்கள் மதுரையில் வாழ்ந்தவர்கள். உயர் சாதிக்காரர்களைக் கிறித்தவச் சமயத்திற்கு மாற்றும்

நோக்கம் கொண்டிருந்தவர்கள். உயர் சாதிக்காரர்களுக்கு எழுத்தறிவும் இலக்கியப் பயிற்சியும் உண்டு. எனவே இவர்கள் செய்யுள் நடையில் எழுதினார்கள். உரைநடையும் பண்டித நடையாக இருந்தது.

எனவே, இவர்கள் காலத்திலேயே தமிழ் உரைநடையில் இரு போக்குகள், பழைய உரைநடை மூலங்களின் தொடர்ச்சியாக வளர்க்கப்பட்டன. இலக்கியங்களுக்கு உரையாக எழுதப்பட்ட உரைநடையும், கல்வெட்டில், எல்லோருக்கும் தெரிய வேண்டிய செய்திகளை எழுதி வைக்கப் பயன்பட்ட 'வியவஸ்தை' என்ற பகுதியின் உரைநடையும் வளர்ந்தன என்று கூறலாம்.

கல்வெட்டுக்களில் மன்னர் குலப்பெருமை, மன்னர் போர் வெற்றிகள் பற்றிக் கூறும் பிரசஸ்தி, மெய்க்கீர்த்தி ஆகிய பகுதிகள் செய்யுள் நடையில் இருக்கும். வியவஸ்தை என்ற பகுதி, பேச்சு நடையைச் சற்றுத் திருத்திய உரைநடையில் இருக்கும்.

இந்த இருவகையான போக்குகளின் வளர்ச்சியாகவே கத்தோலிக்கப் பாதிரிகளின் இருவகை நடைகளையும் கருதலாம். ஒன்று எழுத்தறிவும் இலக்கியப் பயிற்சியும் உடையவர்கள் படிப்பதற்காக எழுதப்பட்டது. மற்றொன்று புதிதாக எழுத்துக் கற்றுக் கொண்ட, இலக்கியப் பயிற்சியில்லாத சாதாரண மக்களுக்காக எழுதப்பட்டது. 'பரமார்த்த குரு கதை,' 'அடியார் வரலாறு' நடையில் இருந்து சிறிது திருத்தமானது. ஆனால் எளிமையானது.

## ஆனந்தரங்கம் பிள்ளையின் டைரி

இதற்குப் பின் நமக்குக் கிடைக்கும் உரைநடை பற்றிய சான்று ஆனந்தரங்கம் பிள்ளையின் டைரி. இந்த டைரி எழுதப்பட்ட காலம் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி. இவர் 1709 முதல் 1761 வரை 52 ஆண்டுகள் வாழ்ந்தவர். இவரது உரைநடைக்கு எடுத்துக்காட்டாக சி.சு. செல்லப்பா, அவருடைய தமிழிலக்கிய விமர்சனம் என்ற நூலில் கொடுத்துள்ள மேற்கோளையே குறிப்பிட்டு, அந்நடையின் தன்மைகளை ஆராய்வோம்.

> இந்த நாள் காலமே ஆறரை மணிக்கு மேல் ஏழு மணிக்குள்ளாக குவர்னர் துரை வீட்டிலே போயிருக்கச்சே நம்மைப் பார்த்து குவர்னர் துரை கேட்ட சேதி என்னவென்றால் கையிலே என்ன இருக்கு என்று கேட்டார்.

அதுக்கு நீர் முந்தா நாள் கொடுத்த லோக்கா பொன்கட்டி இநக்தமென்று சொன்னேன் ஆனால் கட்டிக்கு இருநூத்தி எழுபத்திரண்டு வராகன் விலைக்குக் கொடுக்கிறீரா என்று கேட்டார். அதுக்கு நான் சொன்னது சிஞ்ஞோர் கேட்ட இருநூத்தி எழுபத்தொண்ணே முக்கால் வராக னுக்கு உமக்கு சம்மதியிருந்தால் கொடும். அதுக்கு மேல் ஒரு காசு ஒசத்தலும் தேவையில்லை என்று சொன் னேன். அதுக்கு அவர் இருந்து கொண்டு இனிமேல் நீர் கொண்டு வந்து கொடுக்கப் போகிற வராகன் இப் பொழுது வழங்கில் ஆலம்புரவி வராகன் அல்லவோ கொடுக்கப்படுகிறது. அது ஏழே முக்காலேயரைக்கால் மாத்துயிருக்கிறது. அது எனக்குச் சம்மதி அல்ல. எட்டே வீசம் மாத்திற்கும் வராகன் கொண்டு கொடுத் தால் தமக்கு சம்மதியென்று சொன்னார். அதுக்கு நான் சொன்னது நீ பித்தளை வராகன் கொண்டு வந்து கொடுத் தாலும் வாங்கிக் கொள்ளச் சொல்லுகிறாயா யென்று சொல்லி பின்னை ஒரு உத்திரவு சொன்னார். என்ன சொன்னார் என்றால் நாங்கள் நேற்றய தினம் கோன்செல் கூடி கோன்சலில் தீர்த்த காரியம் என்னவென்றால் இனி மேல் இந்த ஊருக்குள்ளே எட்டு மாத்திற்குள்ளே குறைந்த வராகன் யாதாமொருத்தன் கொண்டு வரு கிறானோ அவன் கையிலே ஆயிரம் வராகன் அபராதமும் வாங்கிக்கொண்டு கொணக்கு முத்திரை போட்டு பின்னை யும் அவமானம் பண்ணுவோம் என்று தீர்த்தோம்.

காலமே சின்னதுரை பேர் விளங்கன் வந்தான். ஆள் கழுக்கு மழுக்கென்று மண்ணிலே எடுத்த வள்ளிக் கிழங்காட்டமாயிருக்கிறான். முகம் பரந்த முகமாய் ஆன வாகனனாயிருக்கிறான். அவன் சென்னப் பட்டணத் துக்குப் போயிருந்து வந்தவன். மீனாட்சியம்மை சத்திரத் திலே வந்து சொல்லியனுப்பினான்.

இந்த நடை பற்றி சி.சு. செல்லப்பா தமது நூலில் கீழ்க் கண்டவாறு கூறுகிறார்:

பிள்ளையின் நடை ரொம்பத் துடியாக இருக்கிறது. சுருக் சுருக் என்று தகவல்களை நமக்குக் குத்திச் சொல் லிக் கொண்டே போகிறது. தகவல் தராத ஒரு வரி கிடையாது.

இந்த நடை, தகவல் தருவதற்கும் வருணனைக்கும் பயன் பட்டிருக்கிறது. வருணனை மூன்று சொற்றொடர்களில்

உள்ளன. இறுதிப் பத்தியில், 'கழுக்கு மழுக்கு; வள்ளிக் கிழங்கு, பரந்த முகம், ஆனவாகனன்' என்ற சொற்கள் புதியவனை வருணிக்கின்றன. வருணனைக்குக்கூடப் பேச்சு வழக்குச் சொற்கள் பயன்படுத்தப்பட்டு ஆளையே நம்முன் கொண்டு வந்து நிறுத்திவிடுகிறார் ஆசிரியர்.

தகவலை—உரையாடலைத் தம் சொற்கள் மூலம் (ரிப்போர்ட் செய்கிறார்) சொல்லுகிறார். தகவல் தரும் பகுதியில், 'யாதாமொருத்தன், தீர்த்த காரியம், விச்சுத் தீர்த்த படிக்கு, ஒரு காசு ஒசத்தலும்' போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை இன்றைய வாசகனுக்கு அந்நியம் தான். ஆயினும் இதே பிரயோகங்கள், முற்கால, சமகாலக் கல்வெட்டுக்களில் பயின்று வருவதைக் காணலாம்.

> யாதாமொருத்தன் இதுக்கு அகிதம் பண்ணினால் குரால் பசுவைக் கொன்ற தோஷத்திலே போவான்
> இதுக்கு விரோதம் பண்ணினாமாகில் பொன்னறக் கொண்டு மண்ணற விச்சுக் குடுத்தோம்

'ஒரு காசு ஒசத்தலும்' என்பதற்குத்தான் கல்வெட்டுச் சான்றுகள் இல்லை.

டைரியும் சாசனமும் 18ஆம் நூற்றாண்டின் பேச்சு நடையில் எழுதப்பட்டவையாகத் தோன்றுகின்றன.

தமிழ் உரைநடை 2000 ஆண்டு கால வரலாறுடையதாயினும், பயன்படுத்தப்பட்ட துறைகள் புதிதாக இருக்கும் பொழுது;

> அது முதிர்ச்சி பெறாத நிலையில் எழுதப்பட்டது என்றே கொள்ளவேண்டும்.
> வாக்கியங்களை எப்படி அமைப்பது என்று அவர்களுக்குத் தெரியாது. கைப்பழக்கம் இல்லை. இலக்கணமும் தெரியாது. அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவு தான். ஏதோ பேசினது போல் எழுதிவிட்டார் என்று சொல்லுவோம். (செல்லப்பா)

இலக்கிய நடைக்கும் பேச்சு நடைக்கும் உள்ள வேறுபாடு குறைந்து, வரப்போகிற நாவல், சிறுகதை இலக்கியங்களின் நடைக்கு இது முன்னுருவமாகத் தோன்றுகிறது.

வ. வே. சு. ஐயர் பாலபாரதியில் இந்த நடையைப் பற்றி ஒரு விமர்சனக் குறிப்பு எழுதியுள்ளார்.

> இந்த தினசரியின் (டைரி) வாசகத்தைப் பற்றி ஓரிரண்டு வார்த்தைகள் சொல்லுவது முறையாகும். அது

> செந்தமிழ் நடையில் எழுதப்படவில்லை. அதில் எழுத்துப் பிழைகள் மலிந்துள்ளன. அநேக படியாத குமாஸ்தாக்களைக் கொண்டு எழுதுவித்தது. இந்த எழுத்துப் பிழைகளும் கருந்தமிழ் நடைக்கும் ஒரு காரணமாக இருக்கலாம். தினசரி கருந்தமிழில் எழுதப்பட்டிருப்பதாலும், அதன் நடையில் ஒரு வன்மையும், ஓட்டமும் இருப்பதாலும், அதை நாம் செந்தமிழாக்காமல் அப்படியே அச்சிடுவதற்கு அறிவாளிகள் ஆட்சேபிக்கமாட்டார்கள் என்று கருதுகிறோம்.
>
> அவர் எழுதி வைத்திருக்கும் குறிப்புகளைப் படிக்கும் போது அக்காலத்துத் தமிழ் நாட்டைச் சலனப்படக் காட்சியில் பார்ப்பது போன்ற உணர்ச்சி நமக்கு உண்டாகிறது. அத்தினசரியாகப் புகைப்படச் சுருள் அவிழ அவிழ எத்தனை விதமான உருவங்கள் தோன்றி மறைகின்றன! ஒவ்வொரு உருவமும் உயிரோடு இருப்பது போலத் தோன்றுகிறது. ஊசியால் குத்தினால் அவ்வுருவங்களில் இருந்து ரத்தம் வருமென்று நமக்குத் தோன்றும். 'கிசு கிசு' மூட்டினால் சிரித்து விடுவார்கள் என்று நினைப்போம். அவ்வளவுக்கு அவை உயிருள்ள மனிதர்கள் என்ற உணர்ச்சி நமக்கு உண்டாகிறது.

கருந்தமிழ் என்று கொச்சை கலந்த ஆனந்தரங்கம் பிள்ளையின் நடையை வ.வே.சு. ஐயர் குறிப்பிடுகிறார். கொச்சை நீக்கிவிட்டாலும்கூடக் கருந்தமிழின் தன்மை போகாது. அப்படியானால்,

> டையரியின் நடையையும், ஐயரின் நடையையும் ஒப்பிடும் பொழுது ஐயரின் நடைதான் செந்தமிழ் என்று சொல்லலாம். அதுவும் பேச்சு நடைக்கு நெருக்கமானது என்றறியலாம். (செல்லப்பா)

## வரலாற்று நூல்களில் உரைநடை

18ஆம் நூற்றாண்டில் கொங்குதேச ராசாக்கள் சரித்திரம் என்ற நூல் ஒன்று எழுதப்பட்டது. அது கொங்குதேச மன்னர்களின் வரலாறு. புராணப் பாங்கிலும் வரலாற்றுப் பாங்கிலும் இரு போக்குகளும் கலந்து எழுதப்பட்டது. இதன் நடையும் பேச்சு நடையில் உள்ளது. இதுவும் கல்வெட்டின் வியவஸ்தைப் பகுதியின் நடையை ஒத்தது. அரசர் பெருமை

கூறும் பகுதிகள் செய்யுள் நடையில் இல்லாமல் உரைநடையிலேயே உள்ளன.

சோழன் பூர்வ பட்டயம் என்பதும் சோழர் வரலாற்றைப் புராணப் பாங்கிலும் மிகை நவிற்சியாகவும் கூறுகிறது. பேச்சு வழக்கைச் சிறிது மாற்றிச் செந்தமிழும் கருந்தமிழும் கலந்து எழுதப்பட்டது. இதில் பல ஊர்களின் பெயர்கள், அதிகாரிகளின் பெயர்கள், போர்களின் செய்திகள் முதலியன கூறப்பட்டுள்ளன. சோழர் வாழ்ந்த காலத்தில் அல்லாமல் மிகவும் பிற்பட்ட காலத்தில் தோன்றிய நூல் இது.

இவ்விரண்டு நூல்களும், வரலாற்று நூல்கள் என்ற நிலையில் பல குறைபாடுகள் உடையனவாயினும், தமிழ் நடை வளர்ச்சியில், ஒரு முக்கியமான கட்டத்தைக் குறிக்கின்றன. தமிழரது வரலாற்றுணர்ச்சிக்கும் வரலாற்று வெளியீட்டுத் திறனுக்கும் இவை சான்றுகளாக உள்ளன.

## நாட்டார் கதைகள்

ஆயினும் நாட்டில் அந்நாளிலிருந்த குழப்ப நிலையில் பல நூல்கள் தோன்றுவதற்குச் சாதகமான நிலைமை இல்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அரசியல் குழப்ப நிலை முடிவுற்று அமைதி நிலை தோன்றியது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடக மேடைக்காகப் பல தெலுங்கு நாட்டுக் கதைகள் உரைநடையில் எழுதப்பட்டன. மதனகாமராசன் கதை, விக்கிரமாதித்தன் கதை, மரியாதைராமன்—தெனாலிராமன் கதை முதலியன நாயக்கர் ஆட்சிக் காலத்திலேயே தமிழ்நாட்டில் அறிமுகமாகியிருந்தன. இவை தெலுங்கு, மராட்டிய நாட்டுக் கதைகள். இவை தமிழில் நாட்டார் கதைத் தாக்கம் பெற்று மாறுதல்களுடன் நூல்களாக அச்சேறின.

தமிழ்நாட்டுக் கதைகளான தூக்குத்தூக்கி கதை, நல்லதங்காள் கதை, கோவலன் கதை, வள்ளி திருமணம் முதலிய கதைகள் நாடகங்களாக எழுதப்பட்டன. இவை பொதுமக்களிடம் பரவின. மேற்கூறிய நூல்களின் உரைநடை பேச்சு வழக்குக்கு நெருக்கமாக இருந்தது.

இதே காலத்தில் புலமை பெற்றோர் தெய்வங்களின் மீது பிள்ளைத்தமிழும் உலாக்களும் பாடிக் கொண்டிருந்தார்கள். உரைநடையை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அரைகுறைப் படிப்புடையவர்கள் இப்பாமர வசன நூல்களை எழுதினார்கள். எனவே, இவை இலக்கியச் சுவையில் தாழ்ந்து காணப்படு

கின்றன. ஆனால் நடை, மக்களது பேச்சு நடைக்கு மிக நெருக்கமாக இருக்கிறது.

## ஆறுமுக நாவலர்—இராமலிங்கர்

இந்நூற்றாண்டின் பிற்காலத்தில் புலமை பெற்றோரில் சிலர் உரைநடை நூல்கள் எழுதினர். அஷ்டாவதானம் வீராசாமிச் செட்டியார், ஆறுமுக நாவலர், இராமலிங்க சுவாமிகள், அராபிக் கதை ஆசிரியர் முதலியோர் பேச்சு நடையின் விறுவிறுப்பையும் உயிர்த்துடிப்பையும் உரைநடையில் ஏற்றினர். இராமலிங்கர் புலமை நடையையும் பேச்சு நடையையும் இணைத்து, அழகையும் ஆற்றலையும் உரை நடைக்கு வழங்கினார். பேச்சு நடைக்கு மிக நெருக்கமான நடையில் இவர் கடிதங்கள் எழுதினார். இவர்கள் தமிழ் உரை நடையை மக்களுக்கு விளங்கும் முறையில் எளிதாக்கப் பாதை வகுத்தார்கள். இவர்களும், இவர்கள் காலத்தில் எழுதிய இன்னும் பலரும் எழுதிய நடை தற்கால உரைநடைக்கு முன்னோடியாகும். இவர்கள் நடை எளிதாகவும் விளங்கும்படியாகவும் இருப்பதற்கு அவர்கள் பொதுமக்கள் படிப்பதற்காக எழுதியதே காரணமாகும்.

இவர்களில் சிலரது நடைக்கு உதாரணங்கள் காட்டுவோம்.

### ஆறுமுக நாவலர்

> சிவபெருமானோடு ஒற்றுமைப்பட்டு, அவ்விறைப் பணியில் வழுவாது நிற்கும் திண்ணனார், பகற்காலத்தில் மிருகங்களைக் கொன்று சுவாமிக்கு இறைச்சியை ஊட்டியும், இராக் காலத்தில் நித்திரை செய்யாமல் சுவாமிக் கருகே நின்றும் இப்படித் தொண்டு செய்து வந்தார்.

### வீராசாமிச் செட்டியார்

> பூர்வம் சோழ ராஜாவின் மேல் கவி பாடிப் பரிசு பெறும் புலவர்களை ஒரு விறகுத் தலையன் பெண்சாதி பார்த்து இவர்கள் ஒரு வேலையும் செய்து கஷ்டப்படாமல் சுகமாக ஜீவனம் செய்துவர நம்முடைய புருஷன் மாத்திரம் காட்டுக்குப் போய் காலில் சுடுமுள் தைக்க நாள் தோறும் மாடு போல உழைத்து விறகு விற்று அரை வயிற்றுக் கஞ்சிக்கும் இல்லாமல் அவதிப்பட வேண்டியது என்ன! என்று நினைத்தாள்.

இவ்வாசகங்கள் நீளமான வாக்கியங்களாக அமைந்திருந்தபோதிலும், நடையில் தெளிவும் விறுவிறுப்பும் காணப்படுகின்றன.

அராபிக் கதையில் நீளமான வாக்கியங்களைக் கைவிட்டு, சிறு வாக்கியங்களை ஆசிரியர் கையாளுகிறார்.

> அந்த க்ஷணமே ஒருவன் என்னிடத்துக்கு வந்து நீ யார் என்று கேட்டான். அவனுக்கு நான் என் விருத்தாந்தத்தைக் குறித்துச் சொன்னேன். அதன் பின்பு அவன் என் கையைப் பிடித்து இழுத்து ஒரு குகைக்குள் இட்டுக் கொண்டு போனான். அவ்விடத்தில் அனேக மனிதர்கள் இருந்தார்கள். அவர்களை நான் பார்த்துப் பிரமித்து ஆச்சரியமடைந்ததைப் பார்க்கிலும், என்னை அவர்கள் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள்.

## தொடக்க கால நாவல்—சிறுகதை

இந்நூற்றாண்டின் இறுதியில் ஆங்கில இலக்கிய அறிவின் தாக்கத்தால் தமிழில் நாவலும் சிறுகதையும் தோன்றின. நாவல் என்ற தற்கால வரையறைக்கு அவை ஈடாக முடியாவிட்டாலும் கற்பனைக் கதை (Romance) என்ற வகையில் அவற்றைச் சேர்க்கலாம். வேதநாயகம் பிள்ளையின் நீண்ட கதைகளை இவ்வகையான படைப்புகளில் சேர்க்கலாம். ராஜமையரின் கமலாம்பாள் சரித்திரம் தமிழில் தோன்றிய முதல் நாவல்களில் ஒன்று. பெண் கல்வி, விதவை மணம், சாதி சமத்துவம் முதலிய சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்ப உரை நடையை இக்காலத்து ஆசிரியர்கள் பயன்படுத்தினார்கள். பிரச்சார வலிமை இவ்வுரைநடையில் காணப்பட்டது. தமிழ்ப் பற்று இவர்களனைவருக்கும் பொதுவான உணர்ச்சி.

**வேதநாயக முதலியார்**

> எண்ணிறந்த தேவாலயங்களும், அன்ன சத்திரங்களும், நிலவளமும், நாகரிகமும் நிறைந்த இந்தத் தமிழ் நாடு, மற்றைய நாடுகளிலும் விசேஷம் எனவும், ஆகபடியே தமிழ் பாஷையும் சர்வோத்திருஷ்டமான பாஷையென்றும் சகலரும் அங்கீகரிக்கிறார்கள்.

**இராஜம் ஐயர்**

> ஸ்ரீநிவாசனுக்குச் சாந்தி முகூர்த்தமான சமாச்சாரத்தை நாம் முன்னமே சொல்ல அவகாசப்படவில்லை. அவனும் லெட்சுமியும் நளனும் தமயந்தியும் போல வெகு அந்நியோந்நியமாக இருந்தார்கள்.

# பாரதி காலம்

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நடை விரிவான பல துறைகளில் பயன்படுவதற்குப் பாரதி வழிகாட்டினார். அரசியல், பொருளாதாரம், கல்வி, விஞ்ஞானம், சீர்திருத்தம், சமூகவியல் முதலிய பல வாழ்க்கைத் துறைகளிலும் தமிழ் உரை நடையின் செல்வாக்கை அவர் பரவச் செய்தார். இக்காலத்தைத் தமிழ் இலக்கியத்தின் மறுமலர்ச்சி உதயம் என்று கூறலாம். பாரதி தமக்கு முன் மக்களுக்கு விளங்கும்படி எழுதிய ஆசிரியர்களுடைய நடையில், எளிமையும் உயிர்த் துடிப்பும் தெளிவும் உள்ளனவற்றைத் தமது நடைக்கு முன் மாதிரியாகக் கொண்டார். புதிய பொருள்களைத் தமது முன்னோர்களைவிட எளிய நடையில், உள்ளத்தைத் தாக்கும் முறையில் எழுதினார்.

சீர்திருத்த உணர்வையும் நாட்டுப் பற்றையும் வளர்க்க உணர்ச்சியூட்டும் நடையைக் கையாண்டார். அறிவை அகற்சி செய்யவும் தெளிவு காணவும் தருக்கரீதியான நடையைக் கையாண்டார். இரண்டிலும் எளிமையும் தெளிவும் மிளிர்ந்தன. கட்டுரைகளுக்கு அவர் இலக்கிய அந்தஸ்தை அளித்தார். குறிக்கோளுடன் கதைகள் எழுதினார். கற்பனைக் கதைகளில் தத்துவக் கருத்துக்களை உட்பொருளாக அமைத்தார். எளிமையான நடையையே, கூறும் பொருளின் தன்மைக்கேற்ப, விதவிதமாகக் கையாண்டார். பல்வேறு கடினமான கருத்துக்களைக்கூட எளிமையான நடையில் விளக்க முடியும் என்பதை அவர் நிரூபித்தார்.

அவர் பல துறைகளிலும் கையாண்டிருக்கும் உரைநடையின் தன்மையைக் காணச் சில எடுத்துக்காட்டுக்களைக் காண்போம்.

**கதை சொல்லும் உரைநடை (narrative)**

> மறு நாட் காலை முதல் முத்தம்மா பாடு கொண்டாட்டமாகி விட்டது. வீட்டில் அவளிட்டது சட்டம். அவள் சொன்னது வேதம். ஸோமநாதய்யர் ஏதேனுமொரு காரியம் நடத்த வேணுமென்று சொல்லி அவள்

கூடாதென்றால் அந்தக் காரியம் நிறுத்தி விடப்படும், அவர் ஏதேனும் செய்யக் கூடாதென்று சொல்லி அவள் அதைச் செய்து தீர வேண்டுமென்பாளாயின் அது நடந்தே தீரும். இங்ஙனம் முத்தம்மா தன் மீது கொடுங்கோன்மை செலுத்துவது பற்றி மன வருத்த மேற்படுவதுண்டு. ஆனால் அம்மனவருத்தத்தை அப்போதப்போதே அடக்கி விடுவார்.

**தமிழ்ப் பற்று**

உலகத்திலுள்ள ஜாதியார்களிலே ஹிந்து ஜாதி அறிவுத் திறமையில் மேம்பட்டது. இந்த ஹிந்து ஜாதிக்குத் தமிழராகிய நாம் சிகரம் போல் விளங்குகிறோம். எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு. இவற்றிலே தமிழைப் போல வலிமையும், திறமையும், உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வேறொன்றுமேயில்லை.

இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் ஸத்யமில்லை. நாளை வரப்போவது ஸத்யம், மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதும் பரவா விட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள். அதுவரையில் இங்கு பண்டிதர்களாக இருப்போர் தமக்குத் தமிழ்ச் சொல் நேரே வராவிட்டால் வாயை மூடிக் கொண்டு வெறுமே இருக்க வேண்டும். தமிழைப் பிறர் இழிவாகக் கருதும்படியான வார்த்தைகள் சொல்லாதிருக்கவேண்டும். இவ்வளவுதான் என்னுடைய வேண்டுகோள்.

**சீர்திருத்தக் கருத்துக்கள்**

செய்யூரிலிருந்து ஸ்ரீமாதவய்யா ஒரு கிழவருடைய விவாகத்தின் சம்பந்தமாக எழுதியிருந்த கடிதம் சில தினங்கள் முன்னே சுதேசமித்திரனில் பிரசுரம் செய்யப்பட்டிருந்தது.

கிழவருக்கு வயது 70. அவருடைய தாயார் இன்னும் உயிரோடிருக்கிறாள். அந்தப் பாட்டிக்கு வயது 98. இந்தத் தாயாருக்கும் தமக்கும் உபசாரம் செய்யும் பொருட்டுக் கிழவர் ஒரு பதினாறு வயதுக் குமரியைக் கலியாணஞ் செய்து கொள்ளப் போகிறாராம். இதே கிழவரிடம் இதைத் தவிர இன்னும் 21 குமரிகளின் ஜாதகம் வந்திருப்ப

தாகத் தெரிகிறது. கடைசியாக ஒருவாறு தீர்மானஞ் செய்திருக்கிற பெண்ணின் தகப்பனார் பணத்தையும், விதியையும், ஜோதிடத்தையும் நம்பி வேலை செய்கிறார். தெய்வத்தை நம்புவதாகத் தெரியவில்லை. ஒட்டகக்கங்கு ஓரிடத்திலா கோணல் தமிழ்நாட்டிற்கு ஒரு வழியிலா துன்பம்? (தராசு—வசனங்கள் 744)

## ஆண் பெண் சமத்துவம்—பிரச்சாரம்

ருஷியாவில் கொடுங்கோல் சிதறிப்போய்விட்டதாம்.

ஐரோப்பாவிலே ஏழைகளுக்கும் பெண்களுக்கும் நியாயம் வேண்டுமென்று கத்துகிறார்களாம்.

உலக முழுமைக்கும் நான் சொல்லுகிறேன். ஆண் பெண்ணுக்கு நடத்தும் அநியாயம் சொல்லுக்கடங்காது. அதை ஏட்டில் எழுதியவர் இல்லை. அதை மன்றிலே பேசியவர் யாருமில்லை.

பறையனுக்குப் பார்ப்பானும் கறுப்பு மனுஷனுக்கு வெள்ளை மனுஷனும் நியாயம் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறீர்கள்.

பெண்ணுக்கு ஆண் நியாயம் செய்வது அதையெல்லாம் விட முக்கியமென்று நான் சொல்லுகிறேன்.

எவனும் தனது சொந்த ஸ்திரீயை அலக்ஷியம்பண்ணுகிறான். தெருவில் வண்டி தள்ளி நாலணா கொண்டு வருவது மேல் தொழில் என்றும், அந்த நாலணாவைக் கொண்டு நாலு வயிற்றை நிரப்பி வீடு காப்பது தாழ்ந்த தொழிலென்றும் நினைக்கிறான். பெண்கள் உண்மையாக உழைத்து ஜீவிக்கிறார்கள். ஆண்மக்கள் பிழைப்புக்காகச் செய்யும் தொழில்களில் பெரும்பாலும் பொய், சூது, களவு, ஏமாற்று, வெளிமயக்கு, வீண் சத்தம், படாடோபம், துரோகம், கொலை, யுத்தம்!

இந்தத் தொழில்கள் உயர்வென்றும் சோற்றுக்கும் துணி தோய்த்துக் கோயில் செய்து கும்பிட்டு வீடு பெருக்கிக் குழந்தைகளைக் காப்பாற்றும் தொழில் இழிவென்றும் ஆண் மக்கள் நினைக்கிறார்கள்.

வியபிசாரிக்குத் தண்டனை இகலோக நரகம்.

ஆண்மகன் வியபிசாரம் பண்ணுவதற்குச் சரியான தண்டனையைக் காணோம்.

...............

பூமண்டலத்தில் துக்கம் ஆரம்பமாகிறது.

ஆணும் பெண்ணும் ஸமானம். பெண் சக்தி ஆண்...? பெண்ணுக்கு ஆண் தலைகுனிய வேண்டும். பெண்ணை

ஆண் நசுக்கக் கூடாது. இந்த நியாயத்தை உலகத்தில் நிறுத்துவதற்கு நீங்கள் உதவி செய்யவேண்டும். உங்களுக்குப் பராசக்தி நீண்ட ஆயுளும் இஷ்டகாம்ய சித்திகளும் தருவாள் என்று அந்த மிளகாய்ப் பழச்சாமியார் சொன்னார். (மிளகாய்ப்பழச் சாமியார்—வசனம் 714)

தேசிய இயக்கத்தால் கிளர்ச்சி பெற்ற பண்பாட்டு மறுமலர்ச்சி இயக்கத்தின் சகல துறைகளிலும் பாரதியின் உரைநடை ஊடுருவி நிற்கிறது. உறங்குவோரைச் சாட்டையடி கொடுத்து எழுப்புகிறது. ஐயமுற்றோரை ஒளிகாட்டித் தெளிவிக்கிறது. பகைவர்களைத் தாக்கத்தால் மடக்குகிறது.

புதிய கருத்துக்களை மக்களின் எளிய பேச்சுத் தமிழில் கூறுகிறது சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களையும் சமூகப் புரட்சிக் கருத்துக்களையும் தமிழ் வளர்ச்சி பெறத் தமது திட்டங்களையும் பொருளுக்கேற்ற நடை வேறுபாடுகளோடு பாரதி வெளியிடுகிறார்.

மறுமலர்ச்சிக் காலத்தின் கவிதைக்கு அவர் தந்தையாயிருப்பது போலவே, உரைநடைக்கும் அவர் தந்தையாகவே விளங்குகிறார்.

# பாரதி பிற்காலம்

பாரதி காலத்திற்குப் பிறகு தேசிய இயக்கம் வலுப்பெற்றது. சமூகச் சீர்திருத்த இயக்கமும் அதனின்று பிரிந்து பரவியது. இரண்டு இயக்கங்களும் தமிழ் மக்களைக் கவர்ந்து கொள்ளப் பிரச்சாரம் செய்தன. பத்திரிகைகள் இவ்விரண்டு இயக்கங்களுக்கும் உரியனவாகத் தோன்றின.

**ஏடுகள்**

பாரதி நடத்திய பத்திரிகைகள் தேசியப் பிரச்சாரம், சமூகச் சீர்திருத்தம் ஆகிய இரு கருத்துக்களையுமே நாட்டில் பரப்பின. ஆயினும் விடுதலை வேட்கையே அவற்றின் சங்கநாதமாக ஒலித்தது. விடுதலை வேட்கையை அடிநாதமாகக் கொண்டு வ. வே. சு. ஐயர், பரலி சு. நெல்லையப்பர், திரு.வி.க., டி.எஸ். சொக்கலிங்கம் முதலியவர்கள் பத்திரிகைகளை நடத்தினார்கள். வேகமான சமூகச் சீர்திருத்தம், பிராமண எதிர்ப்பு, ஆரிய திராவிட வேறுபாடு ஆகியவற்றை முதன்மைப்படுத்தி ஈ.வெ. ராமசாமிப் பெரியார் பத்திரிகைகள் நடத்தினார். சிறு நூல்களும் வெளியிட்டார்.

பொது மக்கள் உள்ளங்களைத் தம் பக்கம் திருப்புவதற்காக இப்பத்திரிகைகளும் பிரசுரங்களும் முயன்றன. மிக எளிய நடையில் தருக்கரீதியாக இவற்றில் ஆசிரியர்கள் எழுதினார்கள்.

ஈ.வெ.ரா. தமது சொற்பொழிவில் நேரடியாகச் சொல்லுவதுபோலவே, எழுத்திலும் எழுதினார். பேச்சு வன்மையில் காணப்படும் வேகம் எழுத்திலும் இருந்தது. எழுத்தில் காணப்பட வேண்டிய சொற்செட்டு, இறுக்கம், இவரது எழுத்துக்களில் காணப்படவில்லை.

**திரு. வி. க. நடை**

திரு. வி. க. வின் நடை எளிமையாக்கப்பட்ட பண்டித நடை. இந்நடையை அவர் இலக்கியக் கட்டுரைகள் எழுதவும் அரசியல் பிரச்சாரத்திற்கும் பயன்படுத்தினார். அது பேச்சுத் தமிழ்நடைக்கு மிகவும் விலகியதாக இருந்தது ஆனால் அவ

ருடைய பேச்சிலும் எழுத்திலும் தமக்கென உரிய ஒரே நடை யைத்தான் கையாண்டார். அவரது காலத்திற்குப் பிறகு, அந்த நடையைப் பின்பற்றுவோர் தமிழகத்தில் இல்லை

## தமிழில் மார்க்சீயச் சிந்தனைகள்

### சிங்காரவேலுச் செட்டியார்

சமூகச் சீர்திருத்தப் பிரச்சாரத்தில் முதன் முதலில் ஈடு பட்டுப் பின்னர் சமூகப் புரட்சி நிலைக்கு வளர்ச்சியடைந்த சிங்காரவேலுச் செட்டியார், பேச்சுத் தமிழ் நடையை, அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளை விளக்கவும், மார்க் சீயத்தைப் பிரச்சாரம் செய்யவும் பயன்படுத்தினார். பாரதி யின் நடையை வளர்த்துப் புதிய கருத்தை முதன்முதலில் பிரச்சாரம் செய்ய ஒரு புது நடையமைத்தார். மார்க்சீயத் தத்துவத்தையும் பொருளாதாரத்தையும் தமிழில் முதலில் வெளியிட்டவர் இவரே.

தொழிலாளர்களிடையே தொழிற்சங்கப் பணியும் கல்விப் பணியும் புரிந்த சிங்காரவேலர், தொழிலாளர்களுக்கு விளங்கக்கூடிய எளிய தமிழ் நடையையே கையாண்டார். தத்துவச் சிறப்புச் சொற்களை முதன் முதலில் மொழியாக்கம் செய்யவேண்டிய அவசியம் அவருக்கிருந்தது. அவருக்கு முன் அப்பணியைச் செய்தவர் எவரும் இல்லை. எனவே பல இடர்ப் பாடுகளை அவர் கடக்கவேண்டியிருந்தது. ஆங்கிலச் சொல் லின் நுட்பமான பொருளை விளக்கும் முறையில் அவர் சொற் களைப் புதிதாக உருவாக்கினார். கருத்தை விளக்கக்கூடிய சொல் தமிழில் கிடைக்காவிட்டால், ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு அல்லது வடமொழிச் சொல்லைக் கையாண்டார். கருத்தை விளங்கவைப்பதையும் எளிமையாகச் சொல்லு வதையுமே அவர் நோக்கமாகக் கொண்டிருந்தார். புதிய உலகளாவிய மார்க்சீயச் சிந்தனைகளை அவர் தமிழுக்கு அளித்தார்.

## தனித் தமிழ்

பிராமண எதிர்ப்பின் விளைவாக ஆரியர் மொழியான சம்ஸ்கிருதத்தின் மீது சில தமிழ் அறிஞர்கள் வெறுப்புக் கொண்டனர். இவர்களில் சம்ஸ்கிருதம் கற்ற மறைமலையடி கள் போன்றோரும் இருந்தனர். இவர் சாகுந்தலம் போன்ற

சம்ஸ்கிருத நாடகங்களைத் தமிழில் மொழிபெயர்த்து, ஆய்வுரையும் எழுதியுள்ளார். ஞானசாகரம் என்ற ஒரு பத்திரிகையையும் வெளியிட்டார். தமது நாட்குறிப்பை ஆங்கிலத்திலேயே எழுதி வந்தார். வீட்டுக் கணக்குகளையும் ஆங்கிலத்தில் எழுதி வந்தார்.

இவருக்குத் தமிழில் சம்ஸ்கிருதச் சொற்கள் பயின்று வருவது, தமிழின் இனிமைக்குக் கேடாகத் தெரிந்தது. புரியாத சம்ஸ்கிருதச் சொற்கள் மட்டுமன்று; பண்டைத் தமிழ் நூல்களிலேயே கலந்து உருமாறித் தமிழாகிவிட்ட சொற்கள்கூடத் தமிழில் இருக்கக் கூடாது; அவை தமிழின் வளர்ச்சியைத் தடுக்கும் என்ற கொள்கையை முன்வைத்துப் பரப்பினார். தமது வேதாசலம் என்ற பெயரை மறைமலை அடிகள் என்று மாற்றிக் கொண்டார். ஞானசாகரம், அறிவுக் கடலாகிப் பின்னர் நின்று போயிற்று. தாம் முன்னர் எழுதிய கட்டுரைகளில் அளவுக்கு மீறிச் சம்ஸ்கிருதம் கலந்திருந்தார். அவற்றை எல்லாம் களையெடுத்துத் தனித் தமிழில் மாற்றி எழுதினார். இதனை ஓர் இயக்கமாகப் பரவச் செய்தார்.

> அயல்மொழிச் சொற்கள் தமிழில் கலக்கக்கூடாது. அவ்வாறு கலப்பது இன்றியமையாததானால் அவற்றைக் குறிக்கும் தமிழ்ச் சொற்களை உருவாக்கிக் கலக்கவேண்டும். அதுவும் முடியாது போனால் அச்சொற்களைத் தமிழொலிப்படுத்திச் சேர்த்துக் கொள்ளவேண்டும்

என்பது இவர் கருத்து.

**தமிழில் அறிவியல்**

தமிழில் அறிவியல், மானிடவியல், சமூகவியல், ரசாயனம், பௌதீகம், மார்க்சீயம் முதலிய புதிய துறைகள் அறிமுகமாகித் தமிழரின் அறிவு அகற்சியடையத் தொடங்கிய காலத்தில் இந்தக் கருத்துத் தமிழ்ப் புலவர்கள், பண்டிதர்களிடையே வேகமாகப் பரவியது. அறிவியல்களின் கருத்துக்கு முதன்மையில்லாமல், சொற்களைப் பற்றிய விவாதம் கிளம்பியது. எனவே தமிழில் இவற்றைக் கற்பிக்க இயலாது என்ற வாதமும் பலப்பட்டது.

தமிழர்களுக்குப் புதிய இயல்கள் தமிழ்நாட்டில் பரவும் பொழுது இவ்வியல்களே, தமக்குரிய சொற்களையும், பல மொழிகளிலிருந்து கொண்டு வந்து சேர்க்கும். இவை ஒவ்வொன்றிற்கும் தமிழ்ச் சொல்லைப் பண்டைய இலக்கியங்களில் தேட முடியாது. பண்டைய இலக்கியங்கள் தோன்றிய காலத்

தில், அப்பொருள்களும் இல்லை, அவற்றைக் குறிப்பிடச் சொற்களும் இல்லை.

**வழக்குச் சொற்கள்**

சைக்கிள், ரயில், பஸ், ஃபோன், ரேடியோ, டிரான்சிஸ்டர், டேப் ரிக்கார்டர் போன்ற சொற்களுக்குப் பதில் சொற்கள் கண்டுபிடித்து வழங்கினாலும், மக்கள் பேச்சு வழக்கிற்கு அதனை வலிந்து புகுத்துதல் இயலாது. மறைமலையடிகளே, கடிதம் கொணர்வோனை, 'போஸ்ட் மேன்' (Post Man) என்றுதான் அழைத்தார். இவை யாவும் பேச்சு வழக்கில் தமிழாகிவிட்டன.

ஓர் இயந்திரத் தொழிலாளி, ஆங்கிலம் என்று தெரியாமலே பல ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துகிறான். 'ஷிப்ட், ப்ரேக்டௌன், ஸ்பின்னர், லே-ஆப், ஸ்டிரைக், லாக்அவுட்' ஆகியவை ஆங்கிலச் சொற்கள் என்றால், தொழிலாளி எனக்குக்கூட ஆங்கிலம் தெரிகிறதே என்று ஆச்சரியமடைகிறான். இவை எந்த மொழிச் சொற்கள் என்பதே அவனுக்குத் தெரியாது.

மக்களிடையே பரவியுள்ள மொழி வழக்கை எழுத்தாளன் பயன்படுத்தவேண்டும். பேச்சு வழக்கிலோ, எழுத்து வழக்கிலோ இல்லாத புதிய பொருள்களுக்கும், புதிய கருத்துக்களுக்கும் அவை எந்த நாட்டிலிருந்து வந்தனவோ அச்சொற்களையே பயன்படுத்தவேண்டும்.

**வாழும் மக்களுக்காக**

இதனால் தமிழே மாறிப்போய்விடுமே, அடுத்த நூற்றாண்டில் இனம் தெரியாமல் மாறிவிடுமே என்று தனித்தமிழ் வாதிகள் கவலைப்படுகிறார்கள். நம் காலத்து மக்களுக்காகத்தான் நாம் எழுதுகிறோம். அவர்களுக்கு விளங்காத, பொருளைச் சரியாக விளக்காத சொற்களைப் பெய்து எழுதுவதால், நம் காலத்து மக்களுக்கே புரிந்துகொள்ளமுடியாதென்றால், நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் வாழப் போகும் மக்களைப் பற்றிக் கவலையென்ன? அவர்களுக்குத் தேவையான அறிவை அவர்கள் காலத்து எழுத்தாளர்கள் முழுமை செய்வார்கள்.

இரண்டாயிரம் ஆண்டு தொடர்ச்சியான வளர்ச்சியுள்ள தமிழ் மொழி, புதிய புதிய சொற்களை ஏற்றுக் கொள்ளும் திறன் உடையது. சொற்கள் வந்து சேருவதால் மொழியின் அமைப்பு முறை (Structure) மாறுவதில்லை. இதனால்தான்

சங்க இலக்கியங்களை, அவற்றைக் கற்றோர் அறிந்துகொள்ள முடிகிறது.

சங்க இலக்கியங்களை, எளிய தமிழ் மகன் விளங்கிக் கொள்ள முடியுமா? ஓர் எஞ்சினியர் அல்லது டாக்டர் அதனைப் படித்தறிந்துகொள்ள இயலுமா? அவனுடைய துறைகளில் தமிழில் நூல்கள் இயற்றப்பட்டால்தான் அவன் அவற்றைப் படிப்பான்.

### மொழி வளரவேண்டும்

எனவே தற்கால வளர்ச்சிக்கேற்பத் தமிழ் வளரவேண்டும். அறிவு வளர்ச்சியின் வேகத்துக்கேற்பத் தமிழைத் தமிழ் மக்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும். ஆங்கிலத்தின் துணையின்றியே பல இயல்களும் தமிழில் கற்பிக்கப்படும்பொழுது, மொழி மாற்றம் ஏற்படத்தான் செய்யும். மொழித் தூய்மையைக் காப்பாற்றவேண்டும் என்றால், அறிவு வளர்ச்சியைத் தடை செய்யவேண்டும். தூய தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடிக்கும் வரை, உலக விஞ்ஞானிகள் சிந்திக்கவே கூடாது, தொழில் நுணுக்கம் வளரக்கூடாது, மானிடவியல் துறைகளின் ஆராய்ச்சி தடுக்கப்படவேண்டும் என்று தனித்தமிழ்வாதிகள் கருதுகிறார்களா?

அறிவு வளர்ச்சியைத் தமிழரிடையே பரப்பத் தமிழைத் தமிழர் தகுதியுடையதாக்கவேண்டும். ஒரு நூலை எழுதுகிறவன், யாருக்காக எழுதுகிறானோ, அவனுக்கேற்ற நடையைக் கையாளவேண்டும்.

## மணிக்கொடி காலம்

மணிக்கொடி, தமிழ்நாட்டில் அக்காலத்தில் இருந்த புலவர் ஆதிக்கம், பண்டித ஆதிக்கத்திற்குச் சவால் விட்டு, அதனை அழித்தொழிப்பதில் பெரும் வெற்றி பெற்று, காலத்திற்கேற்ற தமிழ்நடையை உருவாக்கியது. தமிழ் உரைநடையில், நடை பேதங்களையும், படைப்பு முறையில் ஒருமையையும் மணிக் கொடி எழுத்தாளர்கள் கொணர்ந்தனர். கொள்கைப் பிடிப் பும் எழுத்தர்ப்பணமும் (Conviction and devotion) கொண்டு பழமைவாதிகள், தூய்மைவாதிகளது எதிர்ப்பை முறியடித்து, தமிழ் மொழி வரலாற்றின் பாதையைத் தற்கால இலக்கியப் படைப்பு நடைக்கு முன்னோடியாக அமைத்தனர்.

இவர்கள் பல வேறுபட்ட இலக்கியக் கொள்கைகளும் தத்துவ நோக்கும் அரசியல் பற்றும் உடையவர்கள். 'கலை

கலைக்காகவே' என்ற கலைக் கொள்கையை உடையவர்கள். ஆயினும் படைப்பாற்றல் உடையவர்கள். கதைப் பொருளை நேர்மையோடு எழுதும்பொழுது realist போக்கு தோன்று கிறது. இலக்கியக் கொள்கைகள் பின்னிழுக்க, வாழ்க்கையார் வம் முன்னிழுக்க, அவர்களது படைப்பாற்றல் முன்னிழுப்பை வலுப்படுத்தியது.

**புதுமைப்பித்தன்**

புதுமைப்பித்தன் முதல் கு.ப.ரா. வரை எத்தனை வகை யான படைப்புகளில் ஒவ்வொருவரும் தனித்தன்மையான தமிழ் நடையைக் கையாண்டு தமிழ்நடையைப் பாத்திரப் படைப்பு, உளவியல் வருணனை, சந்தர்ப்ப சூழல், மனித முயற்சியின் வெற்றி தோல்விகள், சமுதாய முரண்பாடுகள், இன்னும் பல வற்றை உருவாக்கிக் காட்டப் பயன்படுத்தியுள்ளார்கள். இவர்களுடைய நடைகளும் படைப்பு முறைகளும் அறிவியல் முறையில் ஆராயப்படவேண்டும். தற்கால Stylistics முறை களைப் பயன்படுத்தி ஆராய இளைஞர்கள் முன் வரவேண்டும்.

சொல்லப்படும் பொருள் எதுவாயினும், சொற்சேர்க்கை, மொழிஅமைப்பு, பேச்சு நடை, எழுத்து நடை வேறுபாடு ஆகிய இவை கருதித் தமிழ் நடையின் வளர்ச்சி, மணிக்கொடி காலத்திற்குப் பின் மிகவும் வளம் பெற்றிருக்கிறது.

## திராவிட இயக்கத்தின் நடை

திராவிட இயக்கத்தின் தோற்றம், அதன் கருத்துப் போக்கு இவை பற்றி ஆராய்வது இந்நூலின் நோக்கமன்று. ஆயினும் அவ்வியக்கத்தின் நோக்கம் பற்றி அறியாமல் அதன் நடையின் தன்மையைக் குறித்துக் கருத்துக் கூற முடியாது. எனவே அதன் நோக்கம் பற்றி மிகவும் சுருக்கமாக இங்குக் குறிப்பிடு வோம்.

தேசிய இயக்கத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையைக் கண்டு அஞ்சிய நிலவுடைமைத் தலைவர்களும் ஆட்சி இயந் திரத்தில் பிராமணர்களுடைய செல்வாக்குக் கண்டு தமது ஆதிக்கத்தை மேம்படுத்திக் கொள்ள விரும்பிய நடுத்தர வர்க் கத்தின் மேல்தட்டுப் பகுதிகளும் பழமையின் ஆதிக்கத்தை எதிர்த்த மிகச் சாதாரண சமூகப் பகுதிகளும் இவ்வியக்கத்தை ஆதரித்தனர்.

இவர்களில் நிலவுடைமை நலன்களுடைய சிறு பகுதி, மக்கள் ஆதரவைப் பெற்றுத் தமது சமூக அடித்தளத்தை விரி

வாக்கிக் கொள்ள விரும்பியது. மக்களைக் கவர்ந்து கொள்ளத் தீவிரமான பழமை எதிர்ப்புப் பிரச்சாரமும் பழமையின் பாதுகாவலர்களான பிராமணர்களின் சமூக வேறுபாட்டுக் கொள்கைகளை மிக்க ஆவேசத்துடன் தாக்குகிற ஓர் இயக்கமும் அவர்களுடைய வர்க்க நலனுக்குத் தேவையாக இருந்தது. இவ்வியக்கத்தின் தலைமை நிலப்பிரபுத்துவப் பகுதிகளிடமே இருந்தது. அப்பகுதிகள் பிராமணர் அல்லாத மேல் வகுப்பினராக இருந்தனர்.

அவர்களுடைய கோரிக்கைகளில் ஆர்வமில்லாத சாதாரணத் தமிழ் மக்கள் சாதி வேறுபாடுகள் காரணமாக மிகவும் இழிவுபடுத்தப்பட்டிருந்தனர் அவர்களுக்குச் சாதி இழிவை எதிர்த்துப் போராடுவதில் அக்கறை இருந்தது. இதனைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் கோரிக்கைகளுக்குப் பொதுமக்கள் ஆதரவைத் திரட்டுவதில் நிலப்பிரபுத்துவப் பகுதிகள் ஈடுபட்டன.

ஈ.வெ. ராமசாமிப் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் தொடக்கக் காலத்துக்கு முன்பு நீதிக் கட்சியினுடைய அரசியல் நோக்கு இதற்குத் துணையாக இருந்தது. பின்னர் சுயமரியாதை இயக்கம் ஒரு சுதந்தரமான, சமூக ஆதிக்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிற ஓர் இயக்கமாக மலர்ந்தது. இதற்கு நேரடியாகத் தலைமை தாங்காமல் நிலப்பிரபுத்துவப் பகுதிகள் தீவிரக் கருத்துக்கள் கொண்ட ஈ.வெ.ரா.வைத் தலைவராக ஏற்றுக்கொண்டன.

ஈ.வெ.ரா. அதிக எழுத்தறிவில்லாத பொதுமக்களைச் சில சமூக ஆதிக்கக் கருத்துக்களுக்கு எதிராகத் திரட்ட முயன்றார். எனவே, அவர் மொழியை ஆதிக்க எதிர்ப்புப் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தினார். பொதுமக்களிடையே தமது கருத்துக்களைப் பரப்புவதற்காக அவர் மேடைகளில் பேச்சு மொழியைக் கையாண்டார். எழுத்தைப் பிரச்சாரத்துக்காகக் கையாளுகிறபோது அவர் பேச்சுக்கு மிகவும் நெருங்கிய தமிழ் மொழியைக் கையாண்டார். தமிழ் இலக்கியப் பயிற்சியோ, அதற்கொரு மதிப்போ அவர் உள்ளத்தில் இல்லாததால் அவர் கொச்சை மொழியைத் திருத்தவே முயன்றதில்லை. தமிழ் ஒரு காட்டுமிராண்டி மொழி என்று அவர் கூறியது தற்செயலான ஒன்றல்ல.

ஈ.வெ.ரா.வின் நாத்திகவாதத்திலும் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களிலும் சோவியத் ஆதரவுப் பிரச்சாரத்திலும் மக்கள் ஆதரவு திரட்டப்பட்டது. திராவிட இயக்கம் இப்பொழுது மக்களின் இயக்கம் மட்டுமன்று. தமிழ் கற்ற மறைமலையடிகள் போன்றோரது ஆதரவு பெற்ற இயக்க

மாகவும் மலர்ந்தது. இவர்கள் பழுத்த சைவ சித்தாந்த வாதிகள். நாத்திகத்தை ஏற்றுக் கொள்ள மறுப்பவர்கள், புலமை நடையை விரும்புபவர்கள். தமிழின் மேன்மையை மற்ற மொழிகளின் மேன்மைக்கு அதிகமாக மதித்தவர்கள் எனவே இவர்கள் ஈ.வெ.ரா.வின் நாத்திகக் கருத்துக்களையோ சோவியத் ஆதரவுப் பிரச்சாரத்தையோ விரும்பவில்லை. இவர்கள் பிராமண எதிர்ப்பு, வடமொழி எதிர்ப்பு, புராண எதிர்ப்பு ஆகியவற்றிலேயே அவரோடு சேர்ந்து நின்றனர்.

சமூகச் சீர்திருத்த இயக்கமாகத் தொடங்கப்பட்ட சுயமரியாதை இயக்கம், பிராமணர் அல்லாதார் இயக்கமாக அரசியல் வடிவம் பெற்றது. நிலப்பிரபுத்துவ நலன்களைப் பாதுகாக்கும் ஜஸ்டிஸ் கட்சியும் இதனோடு ஒன்றானது. தலைமைக்கும் மக்களுக்கும் முரண்பாடுகள் தோன்றின. ஈ.வெ.ரா. படிப்படியாக மக்களது தீவிர இயக்கத்தை நிலப்பிரபுத்துவத் தலைமையின் விருப்பங்களுக்கு இணங்கி நடக்கச் செய்தார்.

இவ்வியக்கத்தின் அரசியல் போக்குகளால் இதன் தலைவர்களின் தமிழ் நடையில் பெருத்த வேறுபாடுகள் காணப்படுகின்றன. இது தனியாக ஆராயப்படவேண்டிய ஒரு பொருளாகும்.

திராவிட இயக்கத்தில் பல வர்க்கப் பகுதிகள் சேர்ந்து இயங்கிய காரணத்தால் அவர்களது கருத்து வெளிப்பாடுகள் தமிழ் நடையில் வேறுபட்டன.

இவ்வியக்கத்தைச் சில அடிப்படைக் கொள்கைகளின் மீது ஆதாரப்படுத்துவதற்குத் திரு. அண்ணாதுரை முயன்றார். முரண்பட்டிருக்கும் வர்க்க நலன்களின் போராட்டங்களைச் சமரசப்படுத்த அவர் முயன்றார். ஆயினும் சுயமரியாதை இயக்கம், திராவிட இயக்கம் என்ற கருத்தோட்டங்களின் சுமையைத் தாங்கிக்கொண்டே திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஊழியர்கள் தமிழிலக்கிய அறிவையும், ஈ.வெ.ரா.வின் ஆரிய-திராவிடர் கருத்தையும் இணைத்தனர். ஈ.வெ.ரா.வின் இயக்கத்தில் பற்பல கருத்துப் போக்குடையவர்களும் தத்தமக்கெனத் தனித் தனித் தமிழ் நடைகளை வகுத்துக்கொண்டார்கள்.

ஆனால், அண்ணாதுரை ஒரே வகையான தமிழ் நடையின் மூலம் பலவிதமான போக்குகளைச் சமரசம் செய்து வைத்தார். அதே போக்கைத்தான் எல்லாத் தி.மு.க. தலைவர்களும் பின்பற்றுகிறார்கள். ஈ.வெ.ரா. பின்பற்றிய பேச்சு நடையையும் தமிழிலக்கியச் செய்திகள் கொண்ட பேச்சு நடைக்கு மாறான எளிய தமிழ் நடையையும் அவர்கள் கையாண்டனர்.

எதுகை மோனைகள், அடுக்குச் சொற்கள், எதையும் உவமைகளோடு எழுதுவது, பொருளைத் தெளிவாகச் சொல்லாமல் அடைமொழிகளோடும் உவமைக் கதைகளோடும் சொல்லுவது, குழப்பமான கருத்துக்களை மிக நீண்ட வாக்கிய அமைப்புக்களால் தெளிவாக்குவது போல எழுதுவது, உயர்வு நவிற்சி, கூடியவரை எழுத்தறிவில்லாத மக்களுக்கு விளங்கும் படிக் கதை, உவமை முதலிய உத்திகளைப் பயன்படுத்தி எழுதுவது ஆகிய தன்மைகள் தி.மு.க. தலைவர்களின் தமிழ் நடையின் சிறப்பான அம்சங்கள்.

துடிப்புள்ள இளைஞர், மாணவரிடையே இந்த நடை பெரிதும் வரவேற்பினைப் பெற்றது. உள்ளடக்கத்தைவிட உருவத்திற்கு அதிக மதிப்புக் கொடுக்கும் பருவத்தினரான மாணவர்களும் இளைஞர்களும் இந்நடையால் கவரப்பட்டனர். மிகச் சாதாரணமாகச் சொல்லிவிடக் கூடிய செய்தியை மேற்கூறிய உத்திகளைக் கையாண்டு அழகுடனும் ஓசை நயத்துடனும் அண்ணாதுரை எழுதினார்.

> ரஷியா என்றொரு நாடு இருக்கிறதாம்...அங்கு... என்று ஏழை பேசத் தொடங்கினாலோ... 'அங்கு தேனும் பாலும் ஆறாக ஓடுகிறது. வாரிவாரி பருகலாம். பாடுபடாமல் பிழைக்கலாம்' ...'பைத்தியக்காரா! பைத்தியக்காரா! பொய்யுரை கேட்டுப் பூரித்துப் போகிறாயே! அது ஓர் பாவ பூமி! பழிபாவத்திற்கு அஞ்சாத நெஞ்சினர் அவர்கள். அங்கு கலையும் காவியமும் காண முடியாது. ஞானமும் மோனமும் கிடையாது. தேர் திருவிழா இல்லை. தேவனருள் கிடையாது. மகிழ்ச்சி இல்லை. எழுச்சி இல்லை. செக்கு மாடுபோல் மக்கள் கிடந்து உழல்கின்றனர். இங்கு நீ ஆயிரம் கேள்விகள் கேட்கிறாய். பொறுமையாய்ப் பதில் அளிக்கிறோம். அஞ்ஞானத்தால் உளறுகிறாய். மெய்ஞ்ஞானம் போதிக்கிறோம். அங்கு இது போல் முடியுமா? ஏன் என்று கேட்டு வாய் மூடுமுன் பிணமாவாய்' என்று கூறி மிரட்டுவார் ஆட்சியாளர்களும் ஆலை அதிபர்களும்.

இந்த எடுத்துக்காட்டு அண்ணாதுரையின் எழுத்தாகும். இதில் முதலில் கூறிய அத்தனை தன்மைகளுடன் வேறு புதிய யுத்தியையும் பார்க்கலாம். தாம் சொல்ல வந்த கருத்தினை மட்டும் கூறிடாது எதிர்க் கருத்துக்களையும் எடுத்துக் கூறி, அதே நேரத்தில் அதனை எள்ளி நகையாடும் முறையில் கூறி, தங்களுடைய கருத்தினை வலியுறுத்தும் பாணி இது. உரை

யாடல் போல எழுதும் பாணியாகும். இத்தகைய நடை எதிர்பார்த்த வெற்றியினை அவர்களுக்குத் தேடித் தந்தது.

ஆங்கில மொழி நடை மரபில், எழுவாய் முதலில் அமைய வேண்டும், பயனிலை இறுதியில் அமையவேண்டும் என்ற மரபு கிடையாது. தமிழில் இத்தகைய இலக்கண மரபு உண்டு. தமிழ்ச் செய்யுளில் இது மாறுபட அனுமதிக்கப்படுகிறது. ஆனால், ஆங்கில மரபுப்படி பயனிலை முதலிலும் எழுவாயினை அடுத்தும் அமைத்து எழுதுவது அண்ணாதுரையின் வழக்கம். இந்த மரபினைத் தி.மு.க.வினர் பெரிதும் பின்பற்றினார்கள்.

> கேட்டோம், மருண்டோம், கண்டோம், மகிழ்ச்சி கொண்டோம். மடிந்தது பொல்லாங்கு; ஒழிந்தனர் புரட்டர்; சாய்ந்தனர் புல்லர்கள்.

இத்தகைய நடையில் உள்ள ஓசை நயம் கேட்பவர்களையும் படிப்பவர்களையும் கவர்கிறது. விஷயத்தைவிட ஓசை நயம் கவர்ச்சி உடையதாக உள்ளது.

உழைப்பாளிகள் சுரண்டப்படுகின்றனர் என்பதனைப் புள்ளி விபரங்களுடன் கூறுவது ஆராய்ச்சியாளர்கள் கையாள வேண்டிய நடை. பாமரனாய் இருக்கும் உழைப்பாளியைத் தான் சுரண்டப்படுவதை உணர வைக்கவேண்டும். அவனுக்குத் தெரிந்த உவமானத்துடன் கூறினால் அதன் பலன் அதிகம் கிட்டும்.

> காட்டில் வாழும் கடும்புலிக்குக் குகையும், நச்சுப்பல் பாம்புக்குப் புற்றும், நயவஞ்சக நரிக்குப் புதரும் கிடைக்கிறது. ஆயிரமாண்டுகள் அழகொளியுடன் நிற்கத் தரும் அரண்மனைகளும் மந்தகாச வாழ்விற்கான மாளிகைகளும் மாற்றோரைத் திகைக்கச் செய்யும் கோட்டை கொத்தளம் அரண் அகழி ஆகியவற்றினையும் கட்டித் தந்திடும் எனக்குத் தங்க ஓர் குடில் இல்லை.

சுரண்டப்படுகிறவன் எண்ணுவதைப் போல் எழுதும் இத்தகைய யுக்திகளையும் தி.மு.க.வினர் வெற்றிகரமாகக் கையாண்டனர்.

படித்த இளைஞர்களையும் மாணவர்களையும் தங்கள் பக்கம் கவர்ந்துகொள்ளத் தொடர்நடை, நீளமான சொற்றொடர் அமைப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தினர் தி.மு.க. எழுத்தாளர்கள்.

> சென்னை, கப்பம் கட்டி, கட்டியங்கூறி, காவடி தூக்கிச் சேவடி தாங்கி, தன்மானமிழந்து தவிக்கிறதே இது தகுமா?

என்பது போன்ற தொடர் நடையாலும்,

> ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே காந்தாரமும், கனோசும், காமரூபமும், மாளவமும், கூர்ஜரமும், பிறவும் உருவாகாத நாட்களிலேயே அயோத்தியும், அஸ்தினாபுரமும், காசியும், அரித்துவாரமும் திவ்விய சேஷத்திரங்கள் ஆகாததற்கு முன்பே பூம்புகாரும், கொற்கை, தொண்டி, மூசிறி எனும் பல்வேறு துறைமுகங்கள் கொண்டதாய் விளங்கியது எந்நாடோ? எந்த நாட்டிலே முரசு மூன்று, தமிழ் மூன்று வகை என்றும் தானை நால்வகை, போர் முறை பல்வேறு வகை, கருவிகள் பலப்பல என்றும் வகுத்து வைக்கப்பட்டு இருந்ததோ, எந்த நாட்டு முத்தும் பவளமும் பிற நாட்டுப் பேரரசர்கள் தமது காதலைப் பெற்ற கட்டழகியர்க்குக் காணிக்கையாக்கிக் களித்தனரோ...அந்த நாடு, அதன் எல்லைகள் வெட்டப்பட்டு, வேற்றாரால் கவரப்பட்டு, அதன் பண்பு பாழ்படும் வகையில்தான் மொழிக்கும், கலைக்கும் இடமளித்து விட்டு, இடர்பட்டு, இழிநிலை பெற்று, இயல்பு கெட்டு, எழில் குலைந்து, கொற்றம் அழிந்து, கோலம் கலைந்து, மற்றையோர் கண்டு எள்ளி நகையாடத் தக்க விதத்தில் மானமிழந்து, ஈனர்க்குக் குற்றேவல் புரிந்து கிடக்கும் எடுபிடியாக்கப்பட்டுள்ளது

என்பது போன்ற நீண்ட வாக்கிய நடையாலும் இளைஞர்களைக் கவர்ந்தனர்.

தி.மு.க. உரைநடை ஒரே போக்கினை உடையதல்ல என்பதை மேலே உள்ள எடுத்துக்காட்டுகளால் அறியலாம். கூற வந்த செய்திக்குத் தக்கபடி உரைநடை மாற்றப்படுகிறது. படித்த இளைஞர்களைக் கவர்வதற்கு ஏற்ற நீண்ட வாக்கியத் தொடர்கள், பாமரரைக் கவர்வதற்கு எளிய உவமானம், கதைகள் ஆகியவற்றுடன் கூடிய நடை, உணர்ச்சியைத் தூண்ட, பழம் பெருமையில் தமிழரை மிதக்க வைக்க அலங்காரச் சொற்கள் நிறைந்த நடை எனப் பலவகையான நடைகளை அவர்கள் கையாண்டுள்ளனர்.

இந்நடையின் கவர்ச்சி தற்போது மிகவும் குறைந்து விட்டது. பிரச்சாரக் கருவியாக இந்நடை பயன்பட்டதே

யன்றிச் சிறந்த இலக்கியப் படைப்புக்களை இந்நடையால் உருவாக்க இயலவில்லை.

சினிமாவில்கூட இந்நடை வெற்றி காணவில்லை. பேச்சு நடையே சினிமாவில் பாத்திரங்களின் இயல்பான உரை நடைகளில் பயன்படுத்தப்படுகின்றது. 'ரொமாண்டிக்' பாணியில் சினிமா சென்றபோது அடுக்குத் தொடர் நடை சிறிது கவர்ச்சியாக இருந்தது. இப்போது 'ரியலிசம்' வெற்றிபெறும் காலத்தில் பாத்திரங்களின் சமூக நிலையில் இயல்பாக வருகிற பேச்சு நடைதான் அப்பாத்திரங்களைப் பூமியில் உலவும் பாத்திரங்களாகக் காட்டுகின்றது.

எனவே செயற்கையான தி.மு.க. நடை இப்போது இலக்கியம், சினிமா முதலிய துறைகளில் எடுபடுவதில்லை.

# தற்காலம்

சிறுகதை, நாவல் துறைகளில் தமிழ்ப் படைப்பிலக்கியம் பெருவளர்ச்சி பெற்றுள்ளது. கடந்த ஐம்பது ஆண்டுகளுக்குள் தமிழிலக்கிய வரலாற்றுக் காலம் முழுவதிலும் தோன்றிய எழுத்தாளர்களைவிட அதிகமான எழுத்தாளர்கள் தோன்றி யுள்ளார்கள்.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் படிப்பவர் தொகை இருபது பங்கு பெருகியுள்ளது. பத்திரிகைகளின் எண்ணிக்கை பல பங்கு அதிகரித்துள்ளது. புத்தக வெளியீட்டகங்கள் மிகப் பல வாகப் பெருகியுள்ளன.

படித்தவர்களின் தொகை அதிகமாகியிருப்பதால், அவர்கள் படிப்பதற்கெனப் பலவகையான சுவைகொண்ட நூல்களும் பத்திரிகைகளும் தேவைப்படுகின்றன.

இந்தத் தேவைகளைப் பயன்படுத்திக்கொண்டு, முதலாளி கள் லட்சக்கணக்கான பிரதிகள் விற்கக்கூடிய பத்திரிக்கைகளை நடத்துகிறார்கள். தரமான இலக்கியம் தேவை என்ற கருத்துக் கொண்ட சிலர் 1000 முதல் 5000 வரை விற்பனையாகும் பத்திரி கைகளை நடத்துகிறார்கள். வெகுஜனப் பத்திரிகைகள் (Mass circulated), முதலாளிக்கு லாபம் என்ற நோக்குத் தவிர, பாமர மக்களின் தாழ்ந்த ரசனைக்குத் தீனி போடுவது என்ற உள் நோக்கமும் உடையன. தரத்தை உயர்த்தும் நோக்கம் விற்பனையதிகமில்லாத பத்திரிகைகள், சில இலக்கியக் கொள்கைகளின் ஆர்வலர்கள், கவனித்துப் படிக்கும் வாசகர் களைக் (Serious readership) கொண்டுள்ளன. இவர்கள் சிறு பான்மையோராயினும், தமிழ்நாட்டின் தரமான இலக்கிய வளர்ச்சிக்கு இவர்களே முன்னோடிகளாக இருக்கப் போகிறார் கள். மணியன், சாவி முதலியவர்கள் வாழ்க்கைக் குறிக் கோளே ஆறு லட்சம் பிரதிகள் விற்பனையாகவேண்டும் என்பதுதான்.

இந்த வளர்ச்சி ஒரே சீராகவும் இலக்கியவாதி விரும்புகிற திசையிலும் இல்லாவிட்டாலும், பாரதி காலத்தைவிட மிகவும் மாறிய, (பெருக்கத்திலாவது) படிக்கிறவர்கள் அதிகரித்துள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது.

மிகச் சிலருக்காக எழுதியவர்கள் இப்பொழுது ஆயிரக் கணக்கானவர்களுக்கோ, லட்சக் கணக்கானவர்களுக்கோ எழுதவேண்டும். வாசகர்களது உணரும் நிலை, அறிவுநிலை, அவனது சமூகச் சூழல் இவை பலதரப்பட்டவை.

வாழ்க்கையின் படைப்பான இலக்கியம், வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புகொண்டது. இலக்கியம் என்ற முறையில் தனியான வளர்ச்சிப்போக்கு விதிகளும் கொண்டது. தற்கால இலக்கியங்களை, இலக்கியமே இல்லை என்று சொல்லுகிறவர்களும், தற்கால இலக்கியத்தை அதன் பரப்பிலும் ஆழத்திலும் ஆய்வு செய்யாமல் சுருக்கு வழிகளில் தம் மனம் போன போக்குக்கேற்றபடி ஆய்வு செய்கிறவர்களும் தமிழின் வளர்ச்சிப்போக்கை இயக்குபவர்களாயிருக்கிறவரை, இவர்களையெல்லாம் ஒதுக்கிவிட்டு, வளர்கிற தற்கால இலக்கியமும் தமிழ்நடையும் பல்கலைக்கழகங்களுக்குள் நுழையாது.

ஆனால், நமது பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்கள், மொழியியல் மாணவர்கள் நவீன இலக்கியத்திலும், stylystic பிரச்சினைகளிலும் ஆர்வம் காட்டி வருகிறார்கள். அமெரிக்க மாணவர் ஒருவர் '150 ஆண்டு தமிழ் நாவல்' என்ற பொருளில் ஆய்வு மேற்கொண்டுள்ளார். ஃபூர்னிக்கா என்ற ரஷியர் ஜெயகாந்தன் பற்றி ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளார். பொன்னீலனின் கரிசலை ரஷ்யனில் மொழிபெயர்த்து வருகிறார். இங்கிலாந்தில் சில ஆய்வாளர்கள் புதுமைப்பித்தன், ஜெயகாந்தன் இவர்களைப் பற்றி ஆராய்கிறார்கள்.

அயல்நாடுகளின் இலக்கியவாதிகள் தமிழ்ப் படைப்புகளை ரசித்த பின்னர்தான் தற்கால—வளரும் தமிழ் இலக்கிய ஆர்வம் தமிழகப் பல்கலைக்கழகங்களுக்குள் புயலடித்து வீசும் என்று எதிர்பார்க்கிறோம். அவ்வாறு தற்காலத் தமிழிலக்கிய ஆர்வம் பெருக்கெடுத்துப் பாயும்போதுதான் தரமான இலக்கிய ஆய்வுகள் பல்கலைக்கழகங்களால் நடத்தப்பெறும்.

தற்கால எழுத்தாளர்களை இரு வகைப்படுத்தலாம்.

> கற்பனையை ஆதாரமாகக் கொண்டு புனையப்படும் ஒரு நிஜம் போன்ற தோற்றமான வாழ்க்கை அனுபவ உணர்ச்சி வெளியீடுதான் கதை. இதில் வரும் கற்பனை, புனைதல், உணர்ச்சி வெளியீடு, வரலாறு ஆகிய இத்தனை தன்மைகளையும் தன் மனத்தில் தோன்றியபடி பிறரிடம் தொற்ற வைப்பதற்கு ஒரு படைப்பாளி கையாளும் சாதனம் பாஷை. அதில் ஒரு அம்சம் உரைநடை. கதைக்கு வேண்டிய மூலப்பொருள்களான சாமான்கள், செயல்கள், மனிதர்கள் ஆகிய மூன்றுடன், உணர்ச்சி, அறிவு என்ற

இரு தன்மைகளும் கலக்க, அவைகளை எடுத்துச் சொல்வதில்தான் அவனது சிருஷ்டி சக்தி இயங்குகிறது. ஆகவே அவன் கதை பின்னுகிறபோது இவற்றை வருணிக்கிற ஒரு போக்கில் ஈடுபட்டு விடுகிறான். அவனது நடை வருணனை நடையாகி விடுகிறது. (செல்லப்பா, இன்று தேவையான உரைநடை—தமிழ் இலக்கிய விமர்சனம் என்னும் நூல்)

இது ஒரு வகை உரைநடை எழுத்து. இதனைப் படைப்பாளி நடை என்று கூறலாம். இதில் மொழி, சூழல், பாத்திரம் இவற்றை உருவாக்குவதில் அழகியலும் (Aesthetics) சம்மந்தப் படுகிறது.

படைப்பு நடை தவிர விளக்கவுரை நடையும் ஆராய்ச்சி நடையும் மிகப்பெரும் வளர்ச்சி பெற்றுள்ளன. இதில் இலக்கியம் பற்றிய விசாரணை அல்லது ஆராய்ச்சியில் பயன்படுத்தப் படும் நடையும், இலக்கியமல்லாத மற்றத் துறைகளின் கருத்து விளக்கத்தில் பயன்படுத்தப்படும் நடையும் அடங்கும்.

ஜானகிராமனையோ, ஜெயகாந்தனையோ இலக்கிய விமர்சனக் கோட்பாடுகளைக் கொண்டோ அல்லது மனிதவியல் கொள்கைகளைக் கொண்டோ, அறிவு மட்டும் கலக்க ஒருவன் ஆராய்கிறபோது, அவற்றை விளக்குவதில் அவன் ஈடுபடுகிறான் (Study of writer). அவன் நடை, விளக்க நடையாகிவிடுகிறது.

இலக்கிய விமர்சன நூல்கள் (செல்லப்பாவின் தமிழில் இலக்கிய விமர்சனம் போன்றவை), இலக்கிய ஆராய்ச்சி நூல்கள் (வையாபுரிப்பிள்ளை, இராசமாணிக்கனார், தெ.பொ.மீ., சாமி சிதம்பரனார், மயிலை சீனிவேங்கடசாமி, நா. வானமாமலை, ரகுநாதன் போன்றோரது நூல்கள்) இவ்வகையில் அடங்கும். தற்காலத்தில் ஆராய்ச்சி இதழ் தொடங்கப்பட்ட பின்னர், இலக்கியம் தவிர வேறு புதிய புதிய துறைகளில், ஆராய்ச்சி வளர்ந்துள்ளது.

மானிடவியல், சமூகவியல், வரலாற்றியல், புனைகதையியல் (mythology) போன்ற அறிவுப் படைப்புத் துறைகளின் அறிவை, தமிழ்நாட்டின் நிலைமைக்கேற்பப் பயன்படுத்தி தமிழ்நாட்டின் பண்பாட்டையும் ஆராயும் கட்டுரைகள் தமிழுக்கே புதிதாக வெளிவருகின்றன. இவை தத்துவ கனம், தர்க்க நீதியான வாதம், தன் கருத்துக்கு எதிரான வாதங்களைச் சான்றுகள் கொண்டு நிராகரித்து தன் கருத்து நிறுவுதல் ஆகிய தன்மைகள் கொண்டவை. சமய வாதங்களில் இதுபோன்ற முறை, கையாளப்பட்டிருப்பினும், இன்று தமிழுக்குப் புதிய துறைகளில் இம்முறை புகுத்தப்பட்டுள்ளது. எனவே

ஆராய்ச்சியில் ஆய்வுக் கட்டுரைகளில் ஒரு புதிய தமிழ் நடை வளர்ந்துள்ளது.

இது விளக்கவுரை நடை என்றழைக்கப்படும். பாரதி தான் இத்தகைய நடையை முதலில் பயன்படுத்தினார். திரு. வி.க. இதனைப் பெரிதும் வளர்த்தார். திரு.வி.க.வின் தெளிவான, பண்டித நடையை எளிதாக்கி அவருக்குப் பின் தோன்றிய கட்டுரையாளர்கள் எழுதினார்கள். வ.ரா. இப்போக்கில் முக்கியமானவர்.

மு.வ. தாம் புகழ்பெற்ற தமிழறிஞராயிருந்தும் பண்டித நடையைக் கைவிட்டு மிகவும் எளிய நடையில் பல துறைகளில் கருத்துக்களை வெளியிட்டார். அவரது படைப்பு இலக்கியங்களில்கூட அவர் கட்டுரை நடைத் தமிழைப் பயன்படுத்தினார். இலக்கிய வரலாறு, இலக்கிய விமர்சனம் ஆகிய துறைகளில், எளிய பேச்சு நடைக்கு நெருங்கிய தமிழை அவர் கையாண்டார். இலக்கிய ஆராய்ச்சியில் அவருடைய கருத்துக்களை, சிறுசிறு வாக்கியங்களில், சிந்தனையோட்டம் அறுந்து போகாமல் அவர் வெளியிடுகிறார்.

படைப்பு இலக்கியம், உணர்ச்சிக்கு விருந்தாகி, நம் மனத்தில் நம் உலகையும் வாழ்க்கையையும் பற்றிய உண்மையான அல்லது பொய்யான படிமங்களைத் தோற்றுவிக்கிறது.

கருத்து விளக்கத் துறைகள், அறிவைச் சுடர் விட்டெரியச் செய்து, நமது பொய்யான கருத்துக்களை அழித்துப் புதிய உண்மையான கருத்துக்களை நம் மனத்தில் தோற்றுவித்து வளர்க்கின்றன. நமது பகுத்தறிவுச் சிந்தனையை வளர்த்து, ஆராயப்படாத விஷயங்களையும் ஆராயத் தூண்டுகின்றன.

ஆராய்ச்சிக் கருத்துக்களை விளக்கப் பயன்படுத்திய கடினமான நடையைக் கைவிட்டுத் தெளிவும் நுட்பமும் மிக்க நடையை 'ஆராய்ச்சி'ப் பத்திரிக்கையில் நூற்றுக் கணக்கானவர்கள் கையாண்டனர். பொருள்களனைத்தும் தமிழுக்குப் புதியவை. சமூகவியல், மானிடவியல் பின்னணியில் தமிழர் பண்பாட்டை அளவீடு செய்யும் முயற்சிகள் முதன் முறையாகத் தொடங்கின. இதற்குத் தெளிவான ஆனால் இதுவரை பயன்படுத்தப்பட்ட மொழி நடையினின்றும் வேறானதோர் நடை தேவையாயிருந்தது. புதிய பொருளை விளக்க வந்த ஆராய்ச்சியாளர்கள், புதிய நடையையும் படைத்தார்கள்.

எடுத்துக்காட்டாகப் பொன்னீலன், 'தோள்சேலைப் போராட்டம்' என்ற கட்டுரையில் முடிவுரையாகக் கூறுகிறார்:

**இது நாஞ்சில் நாட்டு உழைக்கும் மக்களின் ஓர் பகுதியினரான நாடார்கள் தம்மை அடக்கும் சாதீய,**

பொருளாதார, நிலப்பிரபுத்துவ சக்திகளை எதிர்த்து நடத்திய போராட்டம். அவர்கள் ஒன்றுபடுவதற்கு ஒரு கொள்கைத் தொகுதியும், ஒரு பரம்பரை வரலாறும் தேவை. ஏனெனில் இந்தச் சாதியாரை ஒன்றுபடுத்த ஒரு சமூக அமைப்போ, அரசியல் அமைப்போ அப்போது இல்லை. எனவே புதிதாக வந்த கிறிஸ்தவ சகோதரக் கருத்துக்களையும் நாடார் மக்களின் பரம்பரையான கதைகளையும் இணைத்து சமய வரம்பிற்குள் போராட்டம் தொடங்கினார்கள். (ஆராய்ச்சி—13, ப. 73)

கா. சுப்பிரமணியன், தமது 'ஆற்றுப்படை' என்னும் கட்டுரையில் ஆற்றுப்படை என்னும் புறத்திணை பற்றி எழுதுகிறார்:

> ஆற்றுப்படை இலக்கியம் ஆரம்ப காலத்தில் இனக்குழுத் தலைவர்களிடம் கலைஞர்களை வழிப்படுத்தியது. இனக்குழுத் தலைவர்கள் கலைஞர்களோடு கலந்து பழகினர்; உண்டனர், குடித்தனர், ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.
>
> சங்க காலத்தில் நிலவுடைமை வளர்ச்சியும், இனக்குழுக்களின் அழிவும் நிகழ்ந்தன. அரசு என்னும் இயந்திரம் தோன்றியது. இக்காலத்தில் ஆற்றுப்படை இலக்கியம் கலைஞரை வேந்தர்களிடம் வழிப்படுத்தியது. வேந்தர்கள் இனக்குழுத் தலைவரைப் போலக் கலைஞர்களிடம் பேதமின்றிப் பழகவில்லை. ஆகவே வேந்தர் காலத்தில் முன்னோர் வள்ளன்மையைப் புகழ்வதும் கொடாதவனை இகழ்வதும் (அவர்கள் பாடல்களில்) காணப்படுகிறது.
>
> இவ்விரண்டு ஆற்றுப்படை இலக்கியமும் இம்மைப் பயன்களை, அதாவது உணவு, பரிசில் போன்றவற்றைப் பெற்று வாழவே வழிகாட்டுகின்றன.
>
> (ஆராய்ச்சி 14, ப. 146)

ராஜாராமனின் இயல்புத் தொகுதி பற்றி எஸ். தோதாத்திரி எழுதுகிறார்:

> ராஜாராமன் ஒரு அப்நார்மல் கதாபாத்திரம். அவனை அறிமுகப்படுத்தும்போது ஆசிரியர் (ஜெயகாந்தன்) கூறுகிறார். "ஸைகோ அனாலிஸிஸின்படி பார்த்தால் இந்த ஜயராமன் ஒரு அப்நார்மல் கேஸ். ரிஷி மூலத்தின் கதாநாயகனாக ராஜாராமன் ஜெயகாந்தனின் முழுமையான பிராய்டிஸ கதாபாத்திரம். பிராய்டு பேசக்கூடிய 'ஒடிப்பஸ் காம்ப்ளெக்ஸ்' வகையைச் சார்ந்தது. ஐந்து வயதுச் சிறுவனாக இருக்கும்பொழுது அவன் தாய்

(அவன்) தனியறையில் இருப்பதைக் காண்கிறாள். அவனுக்குப் பத்து வயதாகும்போது தாயை நிர்வாணமாகக் காண்கிறான். பின்பு அவள் அவனை கனவில் திருப்திப் படுத்துகிறாள். நனவுலகில் வேதசாஸ்திரங்களைக் கற்று ராஜாராமன் (வேத சாஸ்திர வல்லுனனாக) அறிவாளியாக விளங்குகிறான். சாரதா மாமியிடம் தன் தாயின் சாயலைக் காணும் அவன் அவளோடு பாலுறவு கொள்ளுகிறான். ஆனால், அவன் கல்வியும், சமூகமும் (இச்செயலுக்காக) அவனைக் கண்டிக்கும் என்பதால், (சமூகத்தில் இருந்து பிரிந்து சென்று) துறவு பூண்டு வாழ்கிறான். இது பிராய்டிஸ டைப் ஒன்றுக்கு கற்பனை உதாரணமாகத் தோன்றுகிறது.

இங்கு ஆசிரியர் பிராய்டிஸம், ஒடிபஸ் காம்ப்ளெக்ஸ், அதன் விளைவு இவற்றை ராஜாராமன் என்ற கதாபாத்திரத்தை எடுத்துக்கொண்டு விளக்குகிறார். ஆங்கிலச் சொற்களைக் கொண்டு சில புதிய கருத்துக்களைத் தெளிவாக்குகிறார். இக்கருத்துக்கள் பிராய்டினால் உருவாக்கப்பட்டவை. அவரே கிரேக்கப் புராணக் கதைகளில் இருந்து சில மனவியல் போக்குகளுக்குப் பெயர்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டார். அப்பெயர்களையே தமிழிலும் கையாளுவது பொருத்தமானது தான். ஆனால் டைப், காம்ப்ளெக்ஸ், ஸப்ளைமேஷன் என்ற சொற்களுக்குத் தமிழிலேயே உளவியல் சொற்களைப் புனைந்து கையாண்டிருக்கலாம். காரணத்தோடு பிற மொழிகளிலிருந்து புனையப்பட்ட சொற்களை அவ்வாறே பயன்படுத்துவதுதான் சரியானது. எல்லா மொழிகளுக்கும் பொதுவான உணர்ச்சிகள், வகைப்பாடுகள் ஆகியவற்றிற்குத் தமிழிலும் சொற்களஞ்சியம் உருவாகவேண்டும்.

பி.எல். சுவாமி, பண்பாட்டு மானிடவியல் கட்டுரைகளை மிகத் திறமையாக எழுதுகிறார். அவர் ஆராய்ச்சியில் எழுதிய 'தாய்த் தெய்வ வணக்கம்' என்ற கட்டுரை நூல் வடிவில் வெளிவந்துள்ளது. புதிய கருத்துக்களைக் கூற எளிமையும் நுட்பமும் வாய்ந்த நடையை அவர் உருவாக்கியுள்ளார். இதற்கு முன் தமிழில் ஆராய்ச்சிப் பொருளாக இல்லாத புதிய துறைகளில், பண்பாட்டு, மானிடவியல், சமூகவியல், மொழியியல் முதலிய துறைகளில் சொற்களஞ்சியங்களை உருவாக்குவதும், தர்க்கரீதியாகக் கருத்துக்களை விளக்க ஒரு நடையை உருவாக்குவதும் புதிய முயற்சிகள். இம்முயற்சியில் பி.எல். சுவாமி, நா. வானமாமலை, ஆர். பெரியாழ்வார், எஸ்.வி. சண்முகம் முதலிய ஆய்வாளர்கள் பங்குப் பணியாற்றியுள்ளார்கள்.

இத்தகைய நடைக்கு வகை மாதிரியாக பி.எல். சுவாமியின் 'சாத்தன் வழிபாடு' என்னும் கட்டுரையில் இருந்து ஒருபத்தியை மேற்கோளாகக் கொடுப்போம். சாத்தன் தமிழ்நாட்டில் நிகழ்ந்த பண்பாட்டுக் கலப்பின் காரணமாக உருவான ஒரு படிமம் இதனை சுவாமி இவ்வாறு கூறுகிறார்:

> சாதவாகனர் காலத்தில் சாத்தன் என்ற தெய்வம் வீரவணக்கத்தின் அடிப்படையில் தோன்றியதென்று தெரிகிறது. இந்த தெய்வம் பழங்குடி மக்களின் தெய்வமாக இருந்து, பழங்குடி மக்களின் தாய்த் தெய்வத்தின் மகனாகவும் கருதப்பட்டது இத்தெய்வத்தை சமணரும் புத்தரும் தங்கள் தெய்வமாக ஆக்கினர். பிறகு சைவரும் சாதவாகனனைத் தெய்வமாக ஆக்கிப் புராணங்களைப் படைத்தனர். சிவனைத் தந்தையாக்கி, காளியையும் பார்வதியையும் காமாட்சியையும் தாயாக்கினர். சிவபெருமான் மகன்களில் குமரன், வினாயகன் ஆகியோருடன் சாத்தனும் மகனாக்கப்பட்டான். இன்று கிராமங்களில் காணப்படும் ஐயனார் வழிபாட்டில் பழங்குடி மக்களின் சாதவாகனன் வழிபாடும் சைவரின் சிவபெருமான் மகன் வழிபாடும் கலந்திருப்பதைக் காண்கிறோம். (ஆராய்ச்சி 16, ப. 161)

அறிவியல் துறைகள் அண்மைக் காலத்தில் மிக வளர்ச்சியடைந்துள்ளன. முதலில் தத்துவத் துறையில் கற்கப்பட்ட அறிவியல்கள் தனித்தனியே இயைபியல், பௌதீகம், வேதியல் (Chemistry), தரை இயைபு இயல், தரை வேதியல், உயிரியல் எனப் பிரித்துக் கற்கப்பட்டன. பல மொழிச் சொறகளும் இவற்றின் அருங்கலைக் களஞ்சியங்களில் இடம் பெற்றன. இதன் பிறகு விண்பயணக் கருவிகள் தோன்றிய பின்னர், பல அறிவியல்களுக்கிடையே இருந்த பிரிவுக் கோடுகள் அழிந்தன. பல அறிவியல்கள் இணைந்து ஒரு பொருளைக் கற்றுக் கொள்ளும் இணைப்பு முறை தோன்றியது.

அறிவியல் துறைகளை வரையறை செய்து முதலில் தோன்றிய நூல் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை எழுதிய 'நூல் விளக்கம்' என்பதாகும். என்னென்ன பொருள் பற்றி எந்தெந்த அறிவியல் நூல்கள் விளக்குகின்றன என்ற விளக்கம் இந்நூலில் தரப்படுகிறது. இதன் பின்னர் பள்ளிகளில் தமிழில் அறிவியலின் தொடக்க அறிவு கற்பிக்கப்பட்டது. கலைச்சொற்களை இந்தியா முழுவதற்கும் சம்ஸ்கிருதத்திலேயே உருவாக்கினார்கள். அவை வடமொழிப் பயிற்சியில்லாத தென்மொழி பேசுவோருக்குப் புரியாததாகவும் உச்சரிக்கக் கடினமாகவும் இருந்தன. இதனால் தமிழிலேயே சொற்கள் புனையப்பட்டன.

இச்சொற்களை அறிவியல் வல்லுநர்கள் புனையவில்லை. அறிவியல் அறியாத தமிழ் இலக்கியப் பண்டிதர்கள் புனைந்தார்கள். அறிவியலில் நுட்பமான வேறுபாடுகள் கொண்ட கருத்துக்களை ஒரே சொல்லால் குறிப்பிட்டார்கள். எனவே தெளிவுக்குப் பதில் குழப்பமே மிகுந்தது.

தற்போது அறிவியல் நூல்கள் ஆண்டுதோறும் நூற்றுக் கணக்கில், ஆங்கிலத்தில் வெளியாகின்றன. இவற்றால் பெறப் படும் அறிவு தமிழில் கிடைப்பதில்லை தமிழில் அறிவியல் நூல்கள் குறைவாக இருப்பதற்குக் காரணம் அருங்கலைச் சொற்களைப் பற்றிய குழப்பமே. 'தமிழில் முடியும்' என்ற நூலில் இக்குழப்பத்தைப் போக்க வழிமுறைகளை நானும் எனது நண்பர்களும் கூறி, ஒவ்வோர் அறிவியல் துறையிலும் இச்சிக்கலைத் தீர்க்கும் வழிகளையும் விளக்கியுள்ளோம்.

அறிவியல், உலகில் வளர்ச்சி மொழி பேசுகிற பன்னாட்டவர்களின் படைப்பு. அவரவர்கள் கண்டுபிடிக்கிற புதுமைகளையும், அவ்வந்நாட்டு மொழிகளிலேயே குறிப்பிடுகிறார்கள். கருத்துக்களை மொழிபெயர்க்கலாம். இடுகுறிகளை மொழி பெயர்க்க முடியாது. 'லாஸர்' என்ற ஒரு வகையான ஒளிக் கற்றையைக் குறிக்கும் சொல்லை மொழிபெயர்க்க முடியாது. ஆனால் அது எதனைக் குறிக்கிறது என்ற கருத்தைத் தமிழில் விளக்கலாம். சில சொற்கள் தமிழில் சில கருத்துக்களைக் குறிக்கலாம். அவை பழகிய கருத்துக்களே. ஆனால் எலெக்ட்ரான், நியூட்ரான், புரோட்டான் முதலிய துகள்களைக் குறிக்கத் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தினால், உலகளாவிய அறிவியல் வளர்ச்சியில் இருந்து தமிழர்கள் துண்டிக்கப்படுவார்கள்.

இதனால் தமிழில் அறிவியலைப் பரப்ப முடியாது என்பது பொருளல்ல. உலகச் சொற்களஞ்சியத்தில் இருந்து சொற்களைத் தாராளமாக எடுத்துக்கொண்டு தமிழிலேயே விளக்கவுரைகளை, எழுதி மக்களுக்குத் தெளிவுபடுத்தலாம். இத்தகைய முயற்சிகள் தமிழை அழகில்லாமல் ஆக்கிவிடுவதாகத் தனித்தமிழ்வாதிகள் கூறுவார்கள். பழைய சொற்களைப் பயன்படுத்துவது மட்டும்தான் தமிழுக்கு அழகு தருகிறது என்று இவர்கள் நினைக்கிறார்கள். புதிய கருத்துக்கள், கருத்தமைப்புக்கள், வரையறைகள் எல்லாவற்றையும் தெளிவாக்கப் பழைய தமிழ்ச் சொற்களே போதும் என்பது இவர்கள் கருத்து.

புதுமையைப் பழமை மூலம் காண்பது மிகத் தவறான தேரர் அறிவுப் போக்காகும். இது புதுமையைத் தவறாக அறிந்துகொள்ள வகை செய்யும். அறிவியல் அறிவுக்குப் பதிலாக, தவறான அறிவியல் கருத்துக்களை இம்முறை மனத்

தில் பதியவைக்கும். பழமையிலேயே புதுமை இருக்கிறது என்ற எண்ணத்தையும் இம்முறை வளர்க்கும்.

புதுமையை அறிய, அப்புதுமையைக் கண்டுபிடித்தவர் களுடைய மொழியையே பயன்படுத்தவேண்டும். அறிவியல் நடையில் அழகு தேவையில்லை. அறிவு நுட்பத்தை விளக்கும் வல்லமை அந்த நடைக்கு இருக்கவேண்டும். பல இடையூறு களைத் தாண்டி, இந்த நடையை வளர்த்து வருகிற அறிவியல் விளக்க எழுத்தாளர்கள் பலர் தமிழில் எழுதுகிறார்கள். இவர் களுள் முன்னோடி, வயதில் முதிர்ந்தவரும் அறிவில் சிறந்த வரும் தமிழுக்குப் புதிய அறிவைக் கொணர்ந்தவருமான பெ.நா. அப்புசாமி அவர்கள். அவர் நூல்கள் எழுதுகிறார். பத்திரிகைகளில் அறிவியல் கட்டுரைகள் எழுதுகிறார். இது தவிர மிகப்பல அறிவியல் விஷயங்களைப் பற்றி எழுதி வைத் திருக்கிறார். இவர் அறிவியல் அறிவைப் பரப்புவதில் கொண் டிருக்கும் ஆர்வம், வெளியீடுகளின் மூலம் ஒரு சிறு பகுதியே நிறைவேறுகிறது. இதனால் மனக்கசப்படைந்த அவர் ஒரு முறை, ஏ.வி. சுப்பிரமணிய ஐயர் என்ற ஆய்வாளரிடம் கூறி னார்:

> இந்தக் காகிதக் கட்டுகளைப் பாருங்கள். இவை நான் எழுதி வெளிவராத கட்டுரைகள். என்னை விறகால் எரிக்க வேண்டாம். இக்காகிதக் கட்டுரைகளைக் கொளுத் தியே எரிக்கலாம். போதுமான அளவு இல்லையா?

அறிவியல் தமிழ் நாட்டு மக்களிடையே பரவவில்லை. தமிழை வளர்க்க அமைக்கப்பட்ட அரசு நிறுவனங்கள் பாடப் புத்தகங்களை வெளியிடுவதை மட்டும் நோக்கமாகக் கொள் ளாமல் தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களிடையே அறிவியல் அறிவைப் பரப்பவேண்டும். அரசே பல எளிய, புதுமையான நூல்களை வெளியிடவேண்டும். தனியார் வெளி யீட்டு நிறுவனங்கள் சிற்சில முயற்சிகளை மேற்கொண்டுள் ளன. இம்முயற்சிகளால் அறிவியல் விளக்க நடை சிறிதளவு வளர்ச்சி பெற்றுள்ளது.

சமூக அறிவியல் துறையும் தமிழுக்குப் புதிது. இத்துறை யில் மொழிபெயர்ப்பு நூல்களே பெரிதும் வெளியாகின்றன. தவிர சில பாட நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. சமூக அறிவியலுக்கெனவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது 'ஆராய்ச்சி.' இதில் வெளிவந்த கட்டுரைகள் சில நூல்களாக வெளிவந்துள்ளன. தமிழ் நடை புதிதாக இத்துறையில் நுழைந் துள்ளது. பலர் இத்துறைகளில் நூல்கள் எழுதினால்தான் பாதை செம்மையுறும்.

மொழிபெயர்ப்பில் கருத்துக்கள், நடையைக் கட்டுப்படுத்து கின்றன. மூலமாக இருந்தால் சிந்தனையே நடையை வழிப் படுத்தும். மூலநூல்கள் பல சமூக அறிவியல் துறைகளில் தோன்றவேண்டும்.

பழமையில் உரைநடை காலத்திற்கேற்ப மாறி வந்துள்ளது. இன்று படைப்பாளியும் ஆராய்ச்சியாளனும் தனக்கு முன்

> படைக்கப்பட்டுள்ள அத்தனை வித உரைநடைகளையும் மனதில் கொண்டு தனக்கு உபயோகமாகக் கூடிய அளவு போக, போதாததற்கு சோதனை நடத்தி உருவாக்கிக் கொள்ளவேண்டியதுதான். (செல்லப்பா)

> இவ்வாறாக மொழி மாறிக் கொண்டே செல்வது தான் மொழியின் இயல்பு. 'பழையன கழிதலும், புதியன புகுதலும்' என்பது சொல் பற்றிய வழக்கு என்று மட்டும் எடுத்துக் கொள்வது சரியல்ல. எல்லா வழிகளிலும் மொழி மாறிக் கொண்டே செல்லும். காலம் பற்றிய வழக்கு வேறுபாடு என்று மட்டும் கொள்வது சரியல்ல. பிரதேசம் பற்றியும் சமூகத்தின் ஜாதி பற்றியும், தொழில் பற்றியும் ஒரே காலத்தில் வழக்கு வேறுபடுதல் உண்டு. இந்த உண்மையை நன்றாக உணர்ந்து தற்காலத்துக்குரிய தமிழின் இலக்கணத்தையும், சொல் முதலிய வழக்குகளின் அகராதியையும் இயற்றுதல் இன்றியமையாதது

என்று வையாபுரிப் பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார்கள்.

தூய தமிழ் என்பது சம்ஸ்கிருதம் போல, மேலோர் (பண் டிதர்) மொழியாகத் தமிழை ஆக்கி, அதனைத் தமிழ் மக்கள் மீது சுமத்துகிற முயற்சியாகும். இது சம்ஸ்கிருதம் போலத் தமிழையும் வழக்கொழிந்து போவதற்குத் தம்மையறியாமலே தூய தமிழ்வாதிகள் செய்கிற முயற்சியாகும்.

நகரங்களின் வளர்ச்சி, தமிழ்நாட்டின் பல சாதிகளைச் சேர்ந்தோர், கூடி வாழ்வதற்குரிய வாய்ப்பை அளிக்கிறது. உதாரணமாகச் சென்னை, மதுரை, கோவை போன்று பல மாவட்ட மக்கள் சேர்ந்து பணிபுரிகிற நகரங்களில் இந்த வாய்ப்பினால் வட்டார மொழி வேறுபாடுகள் குறைகின்றன.

படிப்புப் பரவி வருகிறது. அது மேலும் எழுத்தறிவைப் பெரும்பான்மையான மக்களுக்கு அளிக்குமானால் இன்னும் அதிகமாக வட்டார வேறுபாடுகள் குறைந்து, **Standard Spoken Tamil** உருவாகும். இப்பொழுதே உருவாகிவிட்டது என்று நான் சொல்லவில்லை. பல வேறுபட்ட வழக்குத்

தமிழைப் பேசுகிறவர்கள் மொழியில் வேறுபாடுகள் குறையும் என்றுதான் சொன்னேன்.

பல பகுதிகளில் வாழும் பல சாதிகளைச் சேர்ந்த மக்கள், அழுத்தமும் உயிர்த்துடிப்பும் மிக்க சொற்களை உருவாக்கிப் பயன்படுத்தி வருகிறார்கள். அவற்றை நீக்கிவிட்டு ஒரே சொல்லைப் பயன்படுத்த நிர்ப்பந்திக்க முடியாது. அவையே தமிழகம் முழுவதிலும் ஏற்றுக்கொள்ளப்படும்படி பரப்பப்பட வேண்டும். கி. ராஜநாராயணன், பொன்னீலன், வீர. வேலு சாமி இவர்கள் நெல்லை, கன்னியாகுமரிப் பேச்சுத் தமிழ் நடையை, உரையாடல்களில் பயன்படுத்துகிறார்கள். அப் பேச்சை Standard Tamil இல் எழுதினால் பாத்திரங்கள், உயிருள்ள மனிதர்களாக இல்லாமல் கற்சிலைகள் ஆகிவிடும். இது போன்றேதான் கொங்கு நாட்டு வழக்கு, சென்னை வழக்கு, தஞ்சை வழக்கு முதலியன.

ஒரு Standard Tamil பேச்சு வழக்கு நடை, இலக்கியப் பயன்பாட்டின் மூலமும் நகரங்கள் கூடி வாழ்கிற வாய்ப்பு ஏற்படுவதன் மூலமும் படிப்படியாக உருவாகும். வட்டார மொழியே இல்லை என்று எனது நண்பர்கள் கூறுகிறார்கள். இதற்குக் காரணம் தொழில் வளர்ச்சியும் புதிய நாகரிகங் களுக்கு மக்கள் நகர்வதும்தான். கடந்த 50 ஆண்டுகளில், வளர்ந்து வந்துள்ள இலக்கியத் தேவைகளுக்கும் கருத்து விளக்கத் தேவைகளுக்கும் ஏற்றாற்போல், முதலில் தட்டுத் தடுமாறியும், பின்னர் வலிவு பெற்று உறுதியாகவும், தமிழ் நடை வளர்ந்து வருகிறது. இன்னும் பல அறிவியல் துறை களில் அது காலடியெடுத்து வைக்கவில்லை.

அது உலகின் அறிவியல் துறைகளினுள்ளெல்லாம் நுழைந்து, உலக அறிவியல் அறிவைத் தமிழனுக்கு அளிக்க வேண்டும். அதற்குரிய முறையில் தமிழ்ப் படைப்பாளியும் ஆராய்ச்சியாளனும், பேச்சுத் தமிழில் இருந்து தமக்குத் தேவையான நடைகளை உருவாக்குவார்கள்.

பல்வேறுபட்ட உணர்ச்சி வெளியீட்டு இலக்கிய நடையை யும் நுட்பமான அறிவு விளக்க நடையையும் மக்கள் எழுத் தறிவு பெற்று, படிப்பு ஆர்வம் உண்டாகும்பொழுது, அவர் களிடையே தோன்றி வளரும் எழுத்தாளர்கள் உருவாக்குவார் கள். இப்போக்கில் தமிழ் நடை வலுவுடன் முன்னேறும்.